விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 22 புதன்கிழமை (06.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 18

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த பொன்சேகாவுக்கு ஆதரவு

## தமிழ் கூட்டமைப்பு அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்றிரவு அறிவித்துள்ளது. எனினும் இது தொடர்பாக உத்தியோகபூர்வமான அறிவித்தல் இன்று ஊடகவியலாளர்களுக்கு அறிவிக்கப்படவுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச்சட்டம் மேலும் நீடிப்பு; நாடாளுமன்றம் ஒருமாதம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

அவசரகாலச்சட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரணை நேற்று நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 97 வாக்குகளும், பிரேரணைக்கு எதிராக 18 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பிரேரணைக்கு ஆதரவாகவும் எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வாக்களித்தது. இதேவேளை பிரேரணைக்கான வாக்களிப்பின்போது பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி மற்றும் ஜே.வி.பி. போன்றன கலந்து கொள்ளவில்லை.

இதேவேளை எதிர்வரும் பெப்ரவரி 5ஆம் திகதிவரை நாடாளுமன்ற அமர்வுகளை பிற்போடுவதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 26 ஆம் திகதி நடை பெறவுள்ள நிலையில் நாடாளுமன் றம் ஒரு மாதகாலம் ஒத்திவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், சின்னங்கள் அறிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் மொத்தமாக 22 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது. அத்துடன் வேட்பாளர்களின் பெயர்கள் அவர்களின் சின்னங்கள் அடங்கிய விபரங்களையும் வெளியிட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள், சின்னங்கள் விபரம்,

ஐதுருஸ் மொகமட் இல்லியாஸ்–அன்னாசி, மொகமெட் ஹாசிம் மொஹமட் இஸ்மாயில்–கழுகு, விக்கிரமபாகு கருணாரத்ன–மேசை, உபாலி சரத் கோன்கஹேற–கேட், சன்ன ஜானக சுகத்சிறி கமகே–முயல், சிறிதுங்க ஜயசூரிய–முச்சக்கரவண்டி, விஜே டயஸ்–கத்தரிக்கோல்,

முத்துபண்டார தெமினிமுல்ல–உண்டியல், சேனாரத்ன த

(16ஆம் பக்கம் பார்க்க)

## நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவது சாத்தியமில்லை

### பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

வன்முறைகள் அதிகரித்து செல்வதால் சுதந்திரமான நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சாத்தியங்கள் இல்லாது போகும் என பவ்ரல் அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. 40 சர்வதேச கண்காணிப்பாளர்கள் இலங்கைக்கு அழைத்துவர எண்ணியுள்ளதாகவும் வடக்கு

(16ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளர்களினால் நிரம்பி வழியும் யாழ். போதனா வைத்திய சாலை!

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர்களினால் நிரம்பிவழிகிறது. யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் அபாயம் ஏற்பட்டுள்ளதையடுத்து காய்ச்சல் குணம் குறியுள்ளவர்கள் மருத்துவப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையை நாடுவதாக சுட்டிக்காட்டப்பட்டது. இதனால் வெளிநோயாளர் பகுதி, இரத் தப் பரிசோதனை மேற் கொள்ளும் பகுதி என்பன நோயாளர்களினால் நிரம்பிவழிவதுடன் சில விடுதிகளிலும் இட நெருக்கடி ஏற்பட்டுள் ளது.

இதேவேளை தனியார் வைத்திய சாலைகளிலும் டெங்கு அச்சம் காரணமாக பொது மக்கள் இரத்தப் பரிசோதனை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை டெங்கு நோயை கட்டுப்படுத்துவதற்காக யாழ்பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் விழிப்புணர்வு பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. (ச–1)

## அதிபர்–ஆசிரியர் சம்பளம் இவ்வாண்டு உயரும்

(கொழும்பு)

2006 ஆம் ஆண்டின் அரச நிர்வாக சுற் றறிக்கைக்கு ஏற்ப அதிபர்கள் மற்றும் ஆசிரி யர்களின் சம்பள உயர்வு இவ்வருடம் இடம் பெறவுள்ளதாக கல்வி அமைச்சர் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

நீதிமன்றத் தீர்ப்பின்படி செலுத்த உள்ள தொகையும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று பிற்பகல்

(16ஆம் பக்கம் பார்க்க)

## லொறி அரசமரத்துடன் மோதி விபத்து ஒருவர் பலி, ஆறுபேர் படுகாயம்!

### நுணாவில் பகுதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்தலொறி அரச மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் பலியாகியதுடன் ஆறுபேர்படுகாய மடைந்த நிலையில் யாழ். போதனா வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் நுணாவில்

(16ஆம் பக்கம் பார்க்க)

## டெங்கினால் பலியானோரின் எண்ணிக்கை 11 ஆக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாடெங்கும் டெங்கு நோயின் பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில் நேற்று மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 11 ஆக உயர்வடைந்துள்ளது.

கடந்த நான்கு நாட்களில் மட்டும் 5 பேர் மரணமடைந்துள்ளதாகவும். இன்றை வரைக்கும் டெங்கு நோயினால் 464 பேர் இனம் காணப்பட்டு யாழ். போதானா வைத் திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச–7,14)



## இணைய வானொலி அங்குரார்ப்பணம்

சர்வதேச இணைய வானொலியான வாரணம் எவ்.எம்மின் யாழ்.மாவட்ட ஒலிபரப்பு அங்குரார்ப்பண விழாவும் ஒலிபரப்பு இதழியல் பயிற்சி நெறி ஆரம்ப நிகழ்வும் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இல. 20, கன்னாதிட்டி வீதியில் நடைபெறவுள்ளது.

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐயா சச்சிதானந்தம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (ச)

## ஜனாதிபதி தேர்தல் தினத்தன்று தொழிலாளர்களுக்கு விடுமுறை

ஜனாதிபதித் தேர்தலின்போது வாக்களிப்பதற்கு வசதியாக தொழிலாளர்களுக்கு விடுமுறைகள் வழங்கப்பட வேண்டும் என தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதால் தொழில் நிறுவனங்கள் தமது தொழிலாளர்களுக்கு விடுமுறைகளை வழங்கி உதவ வேண்டும். கொடுப்பனவுகளுடன் கூடிய இந்த விடுமுறைகள் எல்லாத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இந்த உத்தரவுகளை உதாசீனம் செய்யும் நபர்கள் தண்டனைக்கு உட்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## கணனித்துறைக்கான இலவச பயிற்சி வழங்கல்

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் வேண்டுகோளுக்கு அமைய பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரனின் ஆலோசனையின் பேரில் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளை உள்ளடக்கிய, பாடசாலையை விட்டு விலகிய அடிப்படைக் கல்வித் தகைமைகளையும் கணனித்துறையில் MS Office பயிற்சிநெறியை ஏற்கனவே பூர்த்தி செய்தவர்களுக்கான உயர் கணனித்துறை பயிற்சி நெறி வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் அனுசரணையுடன் பருத்தித்துறை விதாதா வள நிலையத்தினால் நடத்தப்படவுள்ளது.

இதற்கான வளங்களை பருத்தித்துறை பிரதேச செயலாளர் வழங்கவுள்ளார். ஆர்வமுள்ள மாணவர்கள் க.பொ.த.(சா.த)/க.பொ.த.(உ.த) கல்விச் சான்றிதழ், சுயவிபரக்கோவை, அடையாள அட்டை ஆகியவற்றுடன் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சையின்போது மேற்குறித்த ஆவணங்களின் புகைப்படப் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (ச)

## வரவைப் பதிவு செய்யுமாறு ஆசிரியர்களுக்குப் பணிப்பு

நீண்ட காலமாக தற்காலிக இணைப்பைப் பெற்று யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கிளிநொச்சி, துணுக்காய் வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அவ் வலயத்திற்குச் சென்று தமது வரவினைப் பதிவு செய்யுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று வரைக்கும் 295 ஆசிரியர்கள் கடமைக்குத் திரும்பியுள்ளதாகவும் ஏனைய ஆசிரியர்கள் உடனடியாகப் பணிக்குச் செல்லுமாறும் இவர்களுக்கான இம்மாத சம்பளம் அவ் வலயங்களிலே வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-7)

## தமிழ் அரசியல் கைதிகள் மகசின் சிறையில் உண்ணாவிரதம்

(கொழும்பு)

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இவ் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்ய வேண்டும் அல்லது விசாரணை செய்ய வேண்டும் என கோரியே சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில் 96 தமிழ் அரசியல் கைதிகள் ஈடுபட்டுள்ளனர். இவ் அரசியல் கைதிகள் கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின்போது கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்படுபவர்கள் என பலரும் இச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இக் கைதிகள் நீண்ட காலமாக விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## சாமி விஸ்வநாதக் குருக்களின் மறைவுக்கு இந்து குருமார் ஒன்றியம் அனுதாபம்

(யாழ்ப்பாணம்)

அன்பால் அரவணைக்கும் பண்போடு திகழ்ந்த சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்களின் மறைவு பேரிழப்பாகும் என சர்வதேச இந்து மத குருமார் ஒன்றிய செயலாளர் ஜோ. பிரபாகரக் குருக்கள் வெளியிட்ட அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; எமது மதிப்புக்கும் அன்புக்கும் பாத்திரமான கும்பாபிஷேக கிரியாமணி சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் மறைந்து விட்டார் என்ற செய்தி எம்மை மிகவும் திடுக்கிட வைத்துள்ளது.

அந்தணர் சிரேஷ்டர்களில் கல்வி கேள்வியிலும் வைதீக, ஆகம கிரியா நிகழ்வுகளை நடத்தி வைப்பதிலும் தனித்திறமையும் ஆளுமையும் மிக்க குருக்களின் மறைவு அந்தணக் குலத்திற்கு மட்டுமன்றி சைவ உலகிற்கே ஒரு பேரிழப்பாகும்.

இலங்கையின் சகல பாகங்களிலும் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் மறைந்த குருக்கள் ஆற்றிய கும்பாபிஷேக கிரியைகள் எத்தனையோ ஆயிரம் என்றால் மிகையாகாது.

தளர்வு வந்தபோதும் தனக்கே உரித்தான மிடுக்கோடும் அன்பால் அரவணைக்கும் பண்போடும் திகழ்ந்தமை எம்மால் மறக்க முடியாது.

அவரது ஆத்மா காத்தற்கடவுளாம் வெங்கடேசனின் பாதக் கமலங்களில் சரணடைந்துஇறையின்பம் காணப் பிரார்த்திக்கின்றேன் என்றுள்ளது. (ச)

## கல்விமாணிப் பட்டநெறி அனுமதிக்கு 46 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணிப் பட்ட நெறிக்கு அனுமதி வழங்கப்படுவதற்கு 46 பேர் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுகின்றனர்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நேர்முகத் தேர்வின்போது பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதிகளையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

தேசிய அடையாள அட்டை, பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், க.பொ.த. (உ/த) சான்றிதழ், முதல் நியமனக் கடிதம், ஆசிரிய பயிற்சி சான்றிதழ், சேவைச் சான்றிதழ், தங்களது விலாசத்துடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை, சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட போட்டோப் பிரதி.

மேற்படி விபரங்களுடன் உரிய நேரத்திற்கு வருகை தருமாறு தேசிய கல்வி நிறுவனத்தின் கல்விமாணிப் பட்டநெறி இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டோரின் விபரம் வருமாறு,

சிவலிங்கம் சுதாகர், ஜெயலக்சுமி தவலிங்கம், திருமகள் தவராஜா, மேனகாஸ்வரி தயாபரன், இராமநாதன் வசீகரன், நாகரட்ணம் விஜயகுமார், பசுபதி நளினி, ஆறுமுகன் பொன்வாசன், சூரியகுமார் சசிதரன்,

தருமராஜா சிறிமுரளி, லோகேஸ்வரி சிறிகுருபரன், சுரேஜினி பரம்சோதி, பொன்னம்பலம் பார்த்தீபன், தவயோகம் பிரதீபன், ராஜலிங்கம் ரஞ்சித், வாசுகி செல்வராஜா, வாசுகி செல்வரட்ணம்,

இரத்னவேலு செந்தூரன், சுவாமிநாதன் சாந்தகுமார், கவிதா சிவனேஸ்வரன், வரதராஜன் பாலமுரளி, அல்வின்ஸ் சின்னராஜா அல்ரீன் குரூஸ், ஞானசேகரம் இன்பகரன், திருஞானம் ராவின் ஜெயசீலன், பஞ்சாட்சரம் கேசவன், அருட்செல்வி கிருபாகரன்,

காங்கேசு கிருஷ்ணமோகன், நாகமுத்து மதிவதனி, கோகுலராணி பாலசிங்கம், செபஸ்ரியாம்பிள்ளை கபிற்றியல்பிள்ளை, சின்னத்தம்பி கங்காதரன், சாந்தினி நாகேஸ்வரன், சர்மிளா சின்னத்துரை, கதிர்காமத்தம்பி சிவகுமார்,

பரன்ரூபசிங்கம் சுரேஸ்குமார், சிவபாமா தங்கராஜா, வசந்தி தர்மராஜா, தங்கவடிவேல் தயாகரன், மயூரதி விஜயகுமார், அம்பலவாணர் செர்ணலிங்கம், சுசிரஜனி அம்பிகாபதி, ராஜரட்ணா ஜெயதாஸ், சுதாமதி கனகரட்ணம், சுகந்தினி லிங்கேஸ்வரன், கணேசன் மனோகரன், செல்வராஜா அட்ஜியலிங்கம். (ச)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆங்கில ஆசிரியர்

திரு.செ. ஆனந்தகுமார் அவர்களின் அன்புத் தந்தையார்

**கதிரவேலு செல்லத்துரை**

அவர்களின் திடீர் மறைவு குறித்து வேதனை உற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/திருவடிநிலை சை.த.க. பாடசாலை
சுழிபுரம். (306)


COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

O/L படித்துமுடித்த மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்கும், ஊழியர்களுக்கும் தொழில் சார்கணனிக் கற்கை நெறிகள் ஆரம்பமாகின்றன...

கம்பனிக் கணக்குகளுடன் VAT இனையும் உள்ளடக்கி

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE

உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..

சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான

Quick Book + ACCPAC + MYOB

ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்




Duration:-3Months

வகுப்புக்கள் ஆரம்பம்:-

Batch i :- 08.01.2010 -10AM
Batch ii :- 12.01.2010 -02PM

online வசதிகளும் செய்து கொடுக்கப்படும் 100% செய்முறைபயிற்சியுடன் ஒவ்வொருமாணவர் மீதும் தனிப்பட்டகவனம் செலுத்தப்படும்.

மேல் குறிப்பிட்ட நேரத்திற்கு சமூகமளிக்க முடியாத மாணவர்களுக்கு உங்களுக்கேற்ற விதத்தில் வகுப்புக்கள் ஒழுங்கு செய்துதரப்படும்.


## மரண அறிவித்தல்

### சின்னத்துரை பாலசுப்பிரமணியம்

(JP, MOI/மல்ரி ஓயில் நிறுவன உரிமையாளர்)

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் K.K.S. வீதி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை பாலசுப்பிரமணியம் 03.01.2010 அதிகாலை காலமானார்.

அன்னார் சின்னத்துரை இராசம்மா தம்பதிகளின் மகனும் தர்மலிங்கம் செல்லம்மா தம்பதிகளின் மருமகனும் இந்திராணியின் அன்புக் கணவரும்,

நளினி(U.K.), நரேந்திரன் (U.K.) ஸ்ரீலலிதாம்பிகை, நரேந்திரதேவி (U.K.) உதயபானு (H.N.Dip Acc), உருத்திரன் (U.K.) ஆகியோரின் தந்தையும், புனிதவதி, பரராஜசேகரம்(கனடா), சரஸ்வதி (ஓய்வு பெற்ற பிரதேச சபை செயலாளர், சுன்னாகம்), பாலச்சந்திரன் (செல்வம்), சிவபாக்கியவதி (கனடா), பொன்மலர், தவமலர், சண்முகலிங்கம்(சிறீ,கனடா) ஆகியோரின் சகோதரரும்,

சுதர்சன் (லண்டன்), கணேசமூர்த்தி (கிராம சேவையாளர்), சுதாமதி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், சு.நிவாஷன், சு.லக்ஷிகா, ந.அரிசான் ஆகியோரின் பேரனும்,

காலஞ்சென்ற பஞ்சலிங்கம், கந்தசாமி, ராசக்கோன், தேவராணி மற்றும் சொக்கலிங்கம், சிவபாதசுந்தரம், விசுவலிங்கம், நாகரட்ணம், சித்தானந்தபவானி, மதனகுமாரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 06.01.2010 இன்று நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

K.K.S. வீதி, இணுவில் — தகவல்; மனைவி,பிள்ளைகள்

(C-4146)

## வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் பசில் எம்.பியுடன் சந்திப்பு

ஜனாதிபதியின் ஆலோசகரும் வடக்கின் வசந்தம் செயலணியின் தலைவருமான பசில் ராஜபக்ஷவை வன்னித் தொண்டர் ஆசிரியர்கள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். அலுவலகத்தில் சந்திக்கவுள்ளனர்.

எனவே சகல தொண்டர் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வன்னித் தொண்டர் ஆசிரியர் ஒன்றியச் செயலாளர் பொன்.சிவகரன் கேட்டுள்ளார். (ச)

## கடன் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்

மக்கள் வங்கியின் யாழ்.ஸ்ரான்லி வீதிக் கிளையின், மக்கள் வங்கியின் கடன் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை சண்டிலிப்பாய் வடக்கு சனசமூக நிலையத்தில் காலை 10 மணிக்கும் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் நண்பகல் 12 மணிக்கும் சாவக்கட்டு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கும் நடைபெறவுள்ளது.

இதில் மக்கள் வங்கியின் உயரதிகாரிகள் கலந்து கொண்டு கடன் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைவரையும் பங்குபற்றிப் பயனடையுமாறு மக்கள் வங்கியின் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (ச-4)

# இன்று ஒரு தகவல்

## வாழ்வின் நிறைவு

ஓர் ஆச்சிரமத்தில் ஒரு துறவி இருந்தார். அவரது சீடரொருவர் அவருக்குக் கொடுப்பதற்காக தேநீர்க் கோப்பையைக் கையில் பிடித்துக் கொண்டு மெதுவாக நடந்து வந்தார்.

வாயிற் படியைத் தாண்டும் போது கொஞ்சம் தடுமாறிப் போனார்.

கையிலிருந்த தேநீர்க் கோப்பை தவறிப் போய்க் கீழே விழுந்து விட்டது.

தேநீர் தரை முழுவதும் சிதறிவிட்டது.

அந்தச் சீடர் திகைத்துப் போய் விட்டார்.

மற்ற சீடர்களும் இதைக் கவனித்தார்கள்.

“சரி... இன்றைக்கு இவன் குருவிடம் வகையாக மாட்டிக் கொண்டான்” என்று அவர்களுக்குள் பேசிக் கொண்டார்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் இந்தச் சீடர் நேராக குருவிடம் போனார்.

“எனக்கு ஒரு விடயம் புரியவில்லை” என்று மெதுவாக ஆரம்பித்தார். குரு நிமிர்ந்து பார்த்தார்.

“எந்த விடயம் உனக்குப் புரியவில்லை என்கிறாய்?” என்றார்.

“இந்த உலகத்தில் மரணத்தை யாரும் விரும்புவதில்லை. நான் விரும்பாத ஒன்றை அவர்கள் கட்டாயமாக ஏற்கும்படி ஆகிறதே?” என்றார் சீடர்.

இப்பொழுது குரு சொன்னார்:

“மரணம் என்பது திணிக்கப்பட்டதாக இருந்தால் தானே அது கட்டாயமாகும். உண்மையில் அது அப்படியில்லை. 'இறப்பு என்பது பிறப்பைப் போலவே இயல்பான ஒரு விடயம். பிறந்தவர்கள் இறந்து போவது இயற்கையின் நியதி. அது தவிர்க்க முடியாதது. அதற்காக வருத்தப்பட வேண்டியதில்லை” என்றார்.

உடனே இந்தச் சீடர் சொன்னார்:

“அப்படியானால்... உங்கள் தேநீர்க் கோப்பை இப்போது தவிர்க்க முடியாமல் செத்துப் போய்விட்டது. அதற்காக வருத்தப்படாதீங்க” என்றார்.

இப்படிச் சொன்ன இதே சீடர்தான் பிற்காலத்தில் இக்கியு என்கிற ஜென்குரு.

தன்னுடைய நிலையாமையை உணர்ந்த யாரும் தன்னை விட்டுப் போன எதற்காகவும் (பொன், பொருள், உறவு) வருத்தப்படமாட்டார்கள்.

பெரியவர்களைச் சந்திக்கும் போது, “எனக்காக எதையாவது சொல்லுங்கள்” என்று கேட்பது வழக்கம்.

ஜப்பானில் ஒரு செல்வந்தர் இருந்தார். அவர் ஒரு நாள் 'சென்காய்' என்ற ஜென்துறவியை சந்தித்தார்.

“எனக்காக ஒரு நல்வார்த்தை சொல்லுங்கள்” என்றார்.

துறவி உடனே ஒருவாசகத்தை எழுதிக் கொடுத்தார்.

“தந்தை இறப்பு – அதன்பின்
தனயன் இறப்பு – அப்புறம்
பேரன் இறப்பு” என்று எழுதிக் கொடுத்தார்.

செல்வந்தர் வாங்கிப் பார்த்தார். அவருடைய முகம் ஒருமாதிரியாகி விட்டது.

“என்ன இது ஒரு நல்ல வார்த்தை சொல்லுங்கள் என்று கேட்டால் இப்படியா சொல்வது? இதுவா நல்ல வார்த்தை?”

அவரது குழப்பத்தைக் குரு புரிந்து கொண்டார்.

அவரை அருகில் கூப்பிட்டு, “இப்ப நான் எழுதிக் கொடுத்தேனே... அதுதான் இயல்பு. அப்படி அமைந்தால் தான் நல்லது.

முதலில் தந்தை – அதன்பின் மகன் – அதன்பின் பேரன் இந்த வரிசையில் தான் இறப்பு அமைய வேண்டும். இது இடம்மாறி முன்னே பின்னே நடந்தால் எப்படி இருக்கும்? வரிசையாக வந்து வரிசையாக போக வேண்டும். அது தான் நல்ல வாழ்க்கை” என்று விளக்கம் கொடுத்தார்.

ஒரு டாக்டர் படுக்கையிலிருந்த ஒரு நோயாளியின் கையைப் பிடித்துப் பார்த்தார்.

பக்கத்தில் நின்று கொண்டிருந்த நர்ஸ் கேட்டார்:

“டாக்டர் நோயாளியுடைய பல்சையும் உங்களுடைய கடிகாரத்தையும் மாறிமாறிப் பார்த்துக் குழம்பிப் போய் இருக்கிறீர்களே... என்ன விடயம்?” என்றார்.

“இரண்டில் ஏதோ ஒன்று நின்றுவிட்டது” என்றார் டாக்டர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

## கடமை நிறைவேற்று அதிபர்களுக்கானது

(யாழ்ப்பாணம்)

இன்று புதன்கிழமை வடக்கின் விசேட செயலரின் தலைவரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்சவு டனான சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாகவும் அதற்கமைவாக கடமை நிறை வேற்று அதிபர்கள் அனைவரும் இன்று காலை 8.00 மணியளவில் ஆரியகுளம் சந்தியருகே ஒன்று கூடுமாறு கடமை நிறைவேற்று அதிபர் சங்கத் தலைவர் நா. கண்ணதாசன் கேட்டுள்ளார். (2)

## போதனாசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(அல்வாய்)

வடமராட்சி வலய முறைசாரா கல்வி பிரிவினால் இவ்வாண்டு நடத்தப்படவுள்ள பயிற்சி நெறிகளுக்கான போதனாசிரியர்களை தெரிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதில் எழுத்தறிவு, நவீன உடை தயாரித்தல், பன்ன வேலை, உணவு தயாரித்தலும், கேக் ஐசிங் செய்தலும், குளிர்சாதனப் பெட்டி திருத்தம், குழாய் பொருந்துதல், முக அலங்காரமும் கேக் ஐசிங் செய்தலும், சிங்களமொழி, கணனிவன்பொருள், கையடக்கத் தொலைபேசி திருத்தம், மனை முகாமைத்துவம், அலுமினியம் பிற்றிங், வெளி இணைப்பு இயந்திரம் திருத்தம், தலை அலங்காரம், வெல்டிங் ஆகிய பயிற்சி நெறிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிப்பவர்கள் அதற்குரிய பயிற்சி நெறிகளில் டிப்ளோமா செய்தவர்களாகவும் அல்லது நல்ல பயிற்சி பெற்ற சான்றிதழ்கள் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் வடமராட்சி முறைசாராக் கல்விப் பிரிவில் நேரடியாக ஒப்படைக்கலாம் எனவும் அல்லது வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி, புலோலி என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்க முடியும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (6-4-19)

## இந்து மாமன்றத்தின் சைவ ஆராய்ச்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். அலுவலகக் கட்டடத்தில் அமைந்துள்ள சைவ ஆராய்ச்சி நிலையமும் நூலகமும் சைவப் பிரசாரகர் பயிற்சி நிலையமும் இம்மாதம் 16ஆம் திகதியிலிருந்து செயற்படவுள்ளதாக இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

யாழ். நல்லூர் கோவில் வீதி 211/17ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இந்து மாமன்றக் கட்டடத்தில் இயங்கவிருக்கும் மேற்படி நிலையங்களின் செயற்பாடுகளை மாமன்றத் தலைவர் வி. கயிலாசபிள்ளை ஆரம்பித்துவைக்கவுள்ளார்.

இதற்கமைவாக மேற்படி சைவ ஆராய்ச்சி நிலைய நூலகத்திற்கு இந்து சமயம் சம்பந்தப்பட்ட நூல்களை அன்பளிப்பாகத் தந்துதவுமாறு மாமன்றப் பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் இந்து மக்களைக் கேட்டுக்கொள்கிறார்.

அவ்வாறு அன்பளிப்புத் தருகின்ற நூல்களை யாழ்ப்பாணத்திலுள்ள இந்து மக்கள் நல்லூரில் அமைந்துள்ள மாமன்ற பிராந்திய அலுவலகத்திலும் கொழும்பிலுள்ள இந்து மக்கள் மாமன்றத் தலைமையகத்திலும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் கையளிக்கலாம் என்றும் அறிவித்துள்ளார். (2)

## முன்பள்ளி ஆசிரியைகளுக்கு கொடுப்பனவு வழங்கும் திட்டம்

(கொழும்பு)

பாலர் பாடசாலைகளில் ஆசிரியைகளாகக் கடமையாற்றுகின்றவர்களுக்கு கொடுப்பனவு வழங்கும் திட்டம் ஒன்றை விரைவில் ஆரம்பிக்க உள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடெங்கிலுமுள்ள பாலர் பாடசாலைகளின் ஆசிரியைகளுடனான சந்திப்பொன்று அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த காலங்களில் பதவியில் இருந்த அரசாங்கங்கள் பாலர் பாடசாலை கல்வி குறித்து கவனம் செலுத்தவில்லை.

எனினும் நீண்டநாட்களாக நிலவி வந்த இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் எமது அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருகிறது.

அதனடிப்படையில் இவ்விடயம் குறித்து விரிவான திட்டங்களை வகுத்துள்ளோம். அத்திட்டத்தின் கீழ் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு கொடுப்பனவு ஒன்றை வழங்கும் முறை வெகு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (2-6)

## இராசி பலன்

06-01-2010
(மார்கழி 22 புதன்கிழமை)
சஷ்டி பிற்பகல் 12.47 மணிவரை
உத்தரம் முன்னிரவு 11.28 மணிவரை
இராகுகாலம் 12.31-2.01 மணிவரை
சுபநேரம் 5.01 - 6.31 மணிவரை
அமிர்த சித்தம்

| | |
|---|---|
| மேடம் | செய்தொழில் விருத்தி, ஆரோக்கியநிலை, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| இடபம் | வியாபார விருத்தி, முயற்சி தாமதம், தனவிரயம், குடும்பக் கவலை. |
| மிதுனம் | அதிக பிரயாசை, உறவினர் சந்திப்பு, ரோகநிலை, சுபசெலவு. |
| கடகம் | கூட்டு முயற்சி, போசன சுகம், தன்னம்பிக்கை, பொருள் சேர்க்கை. |
| சிங்கம் | போசன சுகக்குறைவு, அதிக செலவு, மனஸ்தாபம், முயற்சி தாமதம். |
| கன்னி | தெய்வ சிந்தை, விருந்துபசாரம், கௌரவமான நிலை, நண்பர்கள் உதவி. |
| துலாம் | சோம்பல் நிலை, தொழில் நன்மை, பெரியோர் உதவி, சயன சுகக்குறைவு. |
| விருச்சிகம் | தனதானிய சேர்க்கை, குடும்ப சுகம், முயற்சி கைகூடும், நற்கீர்த்தி. |
| தனுசு | பிரபுத்தனம், நண்பர்கள் உதவி, காரிய சித்தி, போசன சுகம். |
| மகரம் | உத்தியோக பங்கம், பயந்த சுபாவம், கட்டுப்பாடு, திடீர் பயணம். |
| கும்பம் | முழங்கால் வலி, காரிய தாமதம், மனக்கவலை, பணக்குறைவு. |
| மீனம் | மனோதைரியம், கீர்த்தி, தொழில் முன்னேற்றம், போசன சுகம். |

வளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 140 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 350 | 400 | 325 |
| தக்காளி | 80 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 45 | 40 |
| கோவா | 100 | 120 | 130 |
| கரட் | 120 | 140 | 110 |
| பூசணி | 40 | 50 | 50 |
| புடோல் | 100 | 120 | 70 |
| வாழைக்காய் | 60 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 130 | 130 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 240 | 290 | 160 |
| வெண்டிக்காய் | 90 | 100 | 70 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 180 | 200 | 150 |
| லீக்ஸ் | 90 | 100 | 130 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | 300 | 320 | 250 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 140 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | 160 |
| கீரை – 1 பிடி | 30 | 35 | 35 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 35 |

# இலங்கையில் புதுமை படைப்பதில் நாங்கள் தான் தலைவர்கள் !

## டயலொக் டிவியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பெருமிதம்



வாடிக்கையாளர் சேவையை மேலும் ஒரு படி இலகுபடுத்தும் முகமாக, இலங்கையின் முதற் தர நேரடி செய்மதி தொலைக்காட்சி சேவையான டயலொக் டி.வி ஆனது,SMS மூல மாக தொலைக்காட்சி அலைவரிசைகளை (சனல் ) இலகுவில் செயற்படுத்தக் கூடிய ஒரு வசதியை வாடிக்கையாளர்களுக்கு வழங் கியுள்ளது.

தொழில்நுட்ப மேம்படுத்தலை முக்கியமாகக் கொண்டு விளங்கும் டயலொக் டி.வியானது SMS அடிப்படையில் தொலைக்காட்சி சனல்களை செயற்படுத்தும்/நீக்கும் இந்த புதிய சேவையினை அறிமுகம் செய்து வைத்தமை, வளர்ந்து வரும் வாடிக்கையாளர்களுக்காய் நிறுவனம் வழங்கும் பல்வகையிலான சிறந்த சேவையை பறைசாற்றுகின்றது.

வாடிக்கையாளர்கள் வேண்டிய பொழுது மொபைல் மூலமாக SMS அனுப்பி சனல்களை நீக்கவோ செயற்படுத்தவோ முடியும். இதனால் எப்பொழுதும் வாடிக்கையாளர்கள்தாம் நினைத்த மாத்திரத்திலேயே சனல்களை தெரிவு செய்ய முடியும்.


தனித்தனியாக தெரிவு செய்யும் இந்த சனல் தெரிவுகளுக்கு அப்பால் டயலொக் டி.வியின் மற்றுமொரு சலுகை யான 7 Days Pass எனும் பக்கேஜ் மூலம் 7நாள்களுக்கு டயலொக் டி.வியின் சனல்கள் விசேட கட்டணத்துக்கு பெற முடியும்.

இது பற்றி கூறிய டயலொக் டி.வியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான நுஷாட் பெரேரா,

இலங்கையின் மிகப்பெரிய கட்டணம் செலுத்தும்-தொலைக்காட்சி சேவை வழங்குநர் என்ற வகையில், அனைவரும் பெறக்கூடியதும் அனைவருக்கும் வசதியானதுமான பக்கேஜினை பெற்றுக் கொடுப்பதிலேயே டயலொக் டி.வி நம்புகின்றது.

நேரம் மிக முக்கிய மான காரணியாக காணப்படுமிடத்து இந்த சேவை மிக முக்கியத்துவம் பெறுகின்றது. SMS மூலம் சனல்களை செயற்படுத்துவ தென்பது தனித்துமானது, அதிலும் அதனை அறிமுகப்படுத்துவது உலகளவில் சில நிறுவனங்களே, அதில் டயலொக் டி.வியும் இடம் வகிப்பது மற்றுமொரு பெருமைக்குரிய விடயமாகும். இது டயலொக் குழுவினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட மற்றுமொரு தீர்வாக அமைகின்றது- நாங்கள் மெய்யாகவே புதுமைப் படைத்தலில் தலைவர்கள் தான் என்றார்.

# டயலொக் டிவியிலுள்ள அலைவரிசைகளை SMS மூலம் சேர்க்கவும் நீக்கவும் முடியும்!




***செட் பிளேனிலுள்ள சனல்களை செயற்படுத்துவதற்கு / நீக்குவதற்கு:***

செட் பிளேன் 1 தொடக்கம் 19 வரையிலான சனல்கள் கொண்டிருப்பவர்கள் அனைவரும் இந்த SMS மூலமான சனல்கள் செயற்படுத்தும் சேவையை பெறலாம். இந்த பிளேன்களுக்குள் அடங்கும் எந்தவொரு சனலையும் செயற்படுத்த விரும்பும்,

டயலொக் வாடிக்கையாளரெனின், ON என டைப் செய்து< இடைவெளி விட்டு > <DTV கணக்கு இலக்கத்தை> டைப் செய்து <இடை வெளி விட்டு>< செட் மற்றும் செட் பிளேன் இலக்கத்தை> டைப் செய்து 679 க்கு SMS அனுப்புங்கள்.

✡ டயலொக் தொலைபேசி அல்லாத வாடிக்கையாளரெனின், ON என டைப் செய்து< இடைவெளி விட்டு> <DTV கணக்கு இலக்கத்தை> டைப் செய்து <இடை வெளி விட்டு> < செட் மற்றும் செட் பிளேன் இலக்கத்தை> டைப் செய்து 0770679679க்குSMS அனுப்புங்கள்.

செட் பிளேன் 1 தொடக்கம் 19 வரையிலான சனல்கள் கொண்டிருப்பவர்கள் அனைவரும் SMS மூலமான சனல்கள் நீக்கும் சேவையை பெறலாம். இந்தப் பிளேனுக்குள் அடங்கும் எந்தவொரு சனலையும் நீக்க விரும்பும்,

✡ டயலொக் தொலைபேசி வாடிக்கையாளர் எனில், OFF என டைப் செய்து< இடை வெளி விட்டு> <DTV கணக்கு இலக்கத்தை> டைப் செய்து <இடை வெளி விட்டு> <செட் மற்றும் செட் பிளேன் இலக்கத்தை> டைப் செய்து 679 ற்கு SMSஅனுப்புங்கள்.

✡ டயலொக் தொலைபேசி அல்லாத வாடிக்கையாளர் எனின் OFF என டைப் செய்து< இடைவெளி விட்டு> < DTV கணக்கு இலக்கத்தை> டைப் செய்து <இடை வெளி விட்டு> < செட் மற்றும் செட் பிளேன் இலக்கத்தை> டைப் செய்து 0770679679க்கு SMS அனுப்புங்கள்.

செட் பிளேனிலுள்ள சனல் ஒன்றை செயற்படுத்தும் அல்லது நீக்கும் இந்த செயற்பாடு நிறைவுற்றவுடன் குறித்த நடவடிக்கையை தெளிவுபடுத்தி வாடிக்கையாளருக்கு SMS மூலம் அறிவிக்கப்படும். குறித்த செட் பிளேன்கள், காலவரையறையின்றி வாடிக்கையாளரின் சனல் செட் பிளேனுக்குள் சேர்க்கப்படும். செயற்படுத்தும் அல்லது நீக்கும் குறித்த சேவைக்கு வாடிக்கையாளர் ஒருவருக்கு 2ரூபாய் மற்றும் வரி கட்டணமாக அறவிடப்படும்.

**யாதொரு சனலையும் செயற்படுத்துவ தற்கு / நீக்குவதற்கு:**

**தாம் மனம் விரும்பும் சனல் ஒன்றை செயற்படுத்த விரும்புபவர்கள்:**

✡ டயலொக் வாடிக்கையாளரெனின் ON என டைப் செய்து< இடை வெளி விட்டு> < DTV கணக்கு இலக்கத்தை> டைப் செய்து <இடை வெளி விட்டு> <சனல் இலக்கத்தை > டைப் செய்து 679 ற்கு SMSஅனுப்புங்கள்.

✡ டயலொக் தொலைபேசி அல்லாத வாடிக்கையாளர் எனின், ON என டைப் செய்து< இடைவெளி விட்டு> <DTV கணக்கு இலக்கத்தை> டைப் செய்து <இடை வெளி விட்டு> <சனல் இலக்கத்தை> டைப் செய்து 0770 679 679 க்கு SMS அனுப்புங்கள்.

**தாம் விரும்பாத சனல் ஒன்றை நீக்க விரும்புபவர்கள்:**

✡ டயலொக் வாடிக்கையாளரெனின் OFF என டைப் செய்து< இடை வெளி விட்டு> <DTV கணக்கு இலக்கத்தை> டைப் செய்து <இடை வெளி விட்டு> < சனல் இலக்கத்தை> டைப் செய்து 679 ற்கு SMSஅனுப்புங்கள்.

டயலொக் தொலைபேசி அல்லாத வாடிக்கையாளரெனின்OFF என டைப் செய்து இடை வெளி விட்டு> < DTV கணககு இலக்கத்தை> டைப் செய்து <இடை வெளி விட்டு> < சனல் இலக்கத்தை> டைப் செயது 0770 679 679 ற்கு SMSஅனுப்புங்கள்

யாதொரு சனலையும் செயற்படுததும் அல்லது நீக்கும் குறித்த செயற்பாடு நிறைவுற்றவுடன் வாடிக் கையாளரின் குறிதத நடவடிக்கை வாடிக்கையாளரின் தொலைக் காட்சி திரையில் திரையிடப்படும்.

புதிதாய் சேர்க்கப்பட்ட இந்த சனல் நீக்கப்பட வேண் டும் என்று SMS மூலம் தெரிவிக்கப்படும் வரை குறித்த சனலானது வாடிக்கையா ளரின் சனல்கள் பட்டியலில் தானியக்கமாக புதுப்பிக்கப்படும்.

இது தவிர 7DAYS PASS பக்கேஜினை செயற்படுத்த விரும்பும் வாடிக்கையாளர் ONஎன டைப் செய்து< இடை வெளி விட்டு> <DTV கணக்கு இலக்கத்தை> டைப் செய்து <இடை வெளி விட்டு> <7D P> டைப் செய்து 0770 679 679 ற்கு SMSஅனுப்பமுடியும்.


**டயலொக் டெலிவிஷன் பிரைவட் லிமிட்டட் பற்றி:**

டயலொக் டெலிகொம் பி.எல்.சி நிறுவனத்தின் இணை நிறுவனமான டயலொக் டெலிவிஷன் பிரைவட் லிமிட்டட் ,டயலொக் செய்மதி தொலைக்காட்சி மற்றும் வீட்டிற்கான நேரடி செய்மதி தொலைக்காட்சிசேவை போன்றவற்றை வழங்கி வருகின்றது.

இலங்கையர்க ளுக்கு மிகச் சிறந்த செய்மதி தொலைக்காட்சி சேவைகளை வழங்குவதையேதமது நோக் காக கொண்டு இயங்கி வரும் டயலொக் டெலி விஷன் பிரைவட் லிமிட்டட் CNN, BBC, HBO, சினி மெக்ஸ், AXN, ESPN டென் ஸ்போர்ட்ஸ், டிஸ்கவரி சனல், MTV(இசைத் தொலைக் காட்சி) மற்றும் கார்டூன் நெட்வர்க் உள்ளிட்ட சர்வதேச தொலைக்காட்சி சேவைகளையும் ஏராளமான தெரிவுகள் அடங்கிய சிட்டி ஹிட்ஸ், சனல் சி, H TV, Learn TV, மற்றும்த புடிஸ்ட் போன்ற இலங்கைத் தொலைக்காட்சி சேவைகளையும் வழங்கி வருகின்றது.

தற்போது டய லொக் டிவியானது நாடு முழுவதும் 1இலட்சத்து50ஆயிரத்துக்கு மேற்பட்ட வாடிக் கையாளர்களுக்கு தமது சிறந்த சேவையினை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







**யாழ். பல்கலைக்கழக நூலக சமூகத்தினரின் ஏற்பாட்டில் நடைவெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தின் ஐந்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடை பெற்ற கண்காட்சியில் பேராயர் ஜெபநேசன், துணைவேந்தர் என்.சண்முகலிங்கன் ஆகியோர் நினைவுச் சுடர் ஏற்றுவதையும், கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியையும் படங்களில் காணலாம்.**

# நாயக்கர் கலைப்பாணி


96

பேராசிரியர் சி.பத்மநாதன்

**இராமேஸ்வரம்**

இந்துக்களின் மிகப் புனிதமான தலங்களுள் ஒன்றாக விளங்கும் இராமேஸ்வரத்திலே மிக விசாலமான கட்டட அமைப்புகள் காணப்படுகின்றன. கோயில் வளாகத்தினுள் பல்வேறு காலங்களைச் சேர்ந்த வெவ்வேறு கோயில்களுங் கட்டடங்களும் அமைந்திருக்கின்றமை ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவை ஏறக்குறைய எட்டு நூற்றாண்


இராமேஸ்வரம் கோபுரங்கள்



டுகளைச் சேர்ந்த கட்டடக்கலை வளர்ச்சியினைப் பிரதிபலிக்கும் பான்மையில் அமைந்துள்ளன. சோழச் சக்கரவர்த்திகள் காலத்துக் கோயில்களும் பாண்டிய மன்னர் காலத்துக் கட்டடங்களும் விஜயநகர காலத்துத் திருப் பணிகளும் நாயக்கர் காலத்துக் கட்டடங்களும் சேதுபதிகளின் திருப்பணிகளும் அங்கே காணப்படுகின்றன.

இராமேஸ்வரம் கோயில் ஓர் உயரமான பீடத்தில் அமைந்திருக்கின்றது. அதனைச் சுற்றி மூன்று பிரகாரங்கள் உள்ளன. மூன்றாம் பிரகாரத்திற்கும் வளாகத்தின் வெளிப் புறச் சுவருக்கும் இடையில் இடைவெளியின்றிப் பூஞ்சோலைகளுந் தோப்புகளும் அமைந்திருக்கின்றன. அவற்றிலிருந்து கோயிலுக்கு வேண்டிய மலர்கள் கிடைக்கின்றன. சிலர் இந்தப் பகுதியை நான்காவது பிரகாரமாகக்கொள்வர். முதலாம் பிரகாரத்தினுட் பல கட்டடங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றிலே இராமநாதசுவாமி கோயிலும் திருக்காம கோட்டமான பர்வதவர்த்தினி அம்மன் கோயிலும் அமைந்திருக்கின்றன. அவற்றிற்கிடையே

இராமேஸ்வரம் உள் மண்டபம்



மூலஸ்தானத்தைச் சுற்றியுள்ள பிரகாரம் 57.43 மீற்றர் நீளமும் 36.5 மீற்றர் அகலமும் கொண்டுள்ளது. இராமநாதசுவாமி கோயில் 0.9 மீற்றர் உயரத்தில் அமைந்திருக்கின்றது. அதே உயரத்தில் நான்கு பக்கங்களிலுமுள்ள பிரகாரச் சுவர்களை ஒட்டியுள்ள மேடைகளில் தேவகோட்டங்கள் அமைந் திருக்கின்றன. அவற்றிலே பரிவார தேவர்களினதும் வேறு தேவர்களினதும் படிமங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. ஆலயத்தைச் சுற்றியுள்ள திருநடைமாளிகை மங்கலவீதி என்னும் பெயரால் வழங்குகின்றது.

திருக்காமகோட்டத்தின் சுற்றுப் பிரகாரப் பகுதி 40.38 மீற்றர் நீளமும் 18.7 மீற்றர் அகலமுங்கொண்டது. அந்தப் பிரகாரத்தினுள் இராமநாதர் கோயில், காசி விஸ்வநாதர் கோயில், விசாலாட்சியம்மன் கோயில், நடராசர் சந்நிதி, பர்வதவர்த்தினி சந்நிதி, இராமநாத சுவாமி கோயில், சோமஸ்கந்தர் கோட்டம் முதலான வை அமைந்திருக்கின்றன. பிரகாரத்தின் நிலமட்டத்தில் கல் அடுக்கப்பட்டுள்ளது. இராமநாதசுவாமி கோயில் விமானம் முத்தள விமானமாகும். மூலஸ்தானம் 10.3 மீற்றர் நீளமுடைய பக்கங்களைக் கொண்ட சதுரமாகும். மூலஸ்தானம் அடியிலிருந்து பிரஸ்தரம் வரை 4.3 மீற்றர் உயரங் கொண்டதாகும். கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம் ஆகியவற்றிற்கிடையே அந்தராளம் அமைந்திருக்கின்றது. அர்த்த மண்டபத்திற்கு முன்னால் அளவிற் பெரியதான மகாமண்டபம் அமைந்திருக்கின்றது. அது 40.76 மீற்றர் நீளமும் 26.23 மீற்றர் அகலமும் கொண்டுள்ளது. அதிலே வரிசையாக அமைந்த தூண்கள் பல உள்ளன. அது வழிபாடு செய்கின்ற அடியார்கள் கூடி நிற்கும் இட மாகும். அர்த்த மண்டபத்து வாயிற் கதவின் மேலே கஜல க்ஷ்மியின் உருவம் அமைந்திருக்கின்றது. அதன் இரு புறங்களிலும் துவாரபாலகரின் உருவங்கள் காணப்படுகின்றன. கர்ப் பக்கிருகத்திலே மூலபேரன் என்று சொல்லப்படும் இலிங்கம் உள்ளது. அதனை இராமபிரானும் சீதாப்பிராட்டியாரும் தாபனம் பண் ணினார்கள் என்பது ஐதீகமாகும். அதன் காரணமாக அது இராமலிங்கம் என்று சொல்லப்படும். அது மணற்கல்லில் இருந்து செதுக்கிய வடிவமாகும். கர்ப்பக்கிருகத்திலே ஸ்படிகலிங்கம் ஒன்றும் அமைந்திருக்கின்றது. அதற்கு முதலில் அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

**காசி விஸ்வநாதர் கோயில்.**

இராமலிங்கசுவாமி கோயிலுக்கு அண்மையிலே வடக்குப் பக்கத்திலே காசி விஸ்வநாதர் கோயில் அமைந்துள்ளது. அது 5.2 மீற்றர் நீளமும் அகலமுங் கொண்ட சதுரமான அமைப்பாகும். அதிலே காணப்படும் இலிங்கத்தை காசியில் இருந்து கொண்டு வந்து அனுமார் தாபித்தார் என்று சொல்வர். கோயிலின் சுவர்களிலே வனப்புமிக்க சிற்பங்கள் காணப்படுகின்றன. அக்கோயில் இராமலிங்கசுவாமி கோயிலுக்குரிய மகா மண்டபத்தின் ஓர் அங்கமாக அமைந்திருக்கின்றது. வாசற்கதவின் இரு பக்கங்களிலும் உலோக வார்ப்பான துவார பாலகர்களின் உருவங்கள் உள்ளன.

**சோமஸ்கந்தர் கோட்டம்**

பிரதான கோயிலின் மகாமண்டபத்தின் தெற்குப் பக்கத்தில் அதனுடன் இணைந்த வண்ணமாகச் சோமஸ்கந்தர் கோட்டம் அமைந்திருக்கின்றது. அது 4.9 மீற்றர் நீளமான பக்கங்களைக் கொண்ட சதுரமான அமைப்பாகும். அதிலுள்ள சுவர்களிலும் அழகிய சிற்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பிரஸ்தரம் வரை உள்ள பகுதி 3.8 மீற்றர் உயரமானதாகும். கர்ப்பக்கிருகத்திலே உலோக வார்ப்பான சோமஸ்கந்தரின் படிமம் அமைந்திருக்கின்றது. வாசற்கதவின் இரு பக்கங்களிலும் உலோகத்தில் அமைந்த துவாரபாலகர் படிமங்கள் உள்ளன.

மகாமண்டபத்திலே இராமர், இலக்குமணர், சீதாப்பிராட்டியார் ஆகியோரின் உலோகப் படிமங்களும் சீதாராமர் கல்யாணக் கோலமான உலோகப் படிமமும் கவிகை ஒன்றின் கீழ் அமைந்திருக்கின்றன. அத்துடன் அஞ்சலிபந்தமான கோலத்தில் அனுமாரின் உருவம் அமைந்திருக்கின்றது. பிரகாரத்தினுள் அகஸ்தீஸ்வரலிங்கம் , கந்தமாதனேஸ்வரலிங்கம் முதலான இலிங்க உருவங்கள் காணப்படுகின்றன. அறுபத்து மூன்று நாயன்மார்களின் உலோகப் படிமங்களும் எழுபத்திரண்டு சிவனடியார்களின் கற் சிற்பங்களுங் காணப்படுவது குறிப் பிடத்தக்கது.


**நடராசர் சந்நிதிகள்**

கோயிலின் வடக்குப் பக்கத்திலே சிவமூர்த்தங்கள் அமைந்திருக்கும் இரண்டு சந்நிதிகள் உள்ளன. அவற்றி லொன்று அம்பலவாணர் சிவகாமசுந்தரி ஆகியோரின் திருக் கோயிலாகும். மற்றையது சிதம்பரேஸ்வரர் ஆலயமாகும். இவ்விரண்டிலும் சிவகாமி சமேதரான நடராசரின் உலோகப் படிமங்கள் உள்ளன.

**விசாலாட்சி அம்மன் கோயில்**

வடக்குப் பக்கத்திலே அமைந்திருக்கின்ற

காசி விஸ்வநாதர் கோபுரம்



விசாலாட்சி அம்மன் கோயிலின் பகுதிகள் பல இரண்டாம் பிரகாரத்தை ஒட்டி அமைந்திருக்கின்றன. அதன் விமானம் ஏகதள விமானமாகும். சமீபத்திலே கோடி தீர்த்த மண்டபம் என்பது காணப்படுகின்றது. அதற்கு அண்மையிலே நர்மதேஸ்வரர், ஏகாதஸபுத்திரர் ஆகியோரின் படிமங்கள் உள்ளன.

இராமநாதசுவாமி கோயிலின் உட்பிரகாரச் சுவர்களிற் செம்மைப்படுத்தப்பட்ட கருங்கற்களாற் கிழக்கு வாசலின் சமீபத்திலே சூரியன், சந்திரன், உரோகிணி, கார்த்திகை, உஷா, பிரதி உஷா ஆகியோரின் உருவங்கள் காணப்படுகின்றன. மகாமண்டபத்தினுடைய தென்கிழக்கில் சர்வதீர்த்தம் என்னும் கிணறு அமைந்துள்ளது. பிரகாரத்தினுள் ஆடல் செய் மண்டபம் என்னும் நடனமாளிகை அமைந்திருக்கின்றது.

**நந்தி மண்டபம்**

ஆலயத்தின் முன்னால், உட்பிரகாரத்தினுள் அமைந்திருக்கும் நந்தி மண்டபம் வனப்புமிக்க கட்டட அமைப்பாகும். அதிலே மிகுந்த வனப்புடைய 38 தூண்கள் உள்ளன. அளவில் மிகப்பெரியதான சுதையில் அமைக்கப்பட்ட நந்தியின் உருவம் அங்கு காணப்படுகின்றது. அது 6.9 மீற்றர் நீளமும் 3.6 மீற்றர் அகலமும் 5.25 மீற்றர் உயரமுங் கொண்ட கம்பீரமான வடிவமாகும். அதனைத் திருமலை நாயக்கரும் மகனாகிய கிருஷ்ணப்ப நாயக்கனும் அமைத்தனர் என்று கோயில் ஆவணங்களில் எழுதப்பட்டுள்ளது. நந்தி மண்டபத்திற்கருகிலே கொடிமரமும் பலிபீடமும் அமைந்திருக்கின்றன. ஏகதள விமானம் பொருந்திய விநாயகர் கோட்டமும் சுப்பிரமணியர் கோட்டமும் அதற்கண் மையில் அமைந்திருக்கின்றன. சுப்பிர மணிய சுவாமி கோட்டத்திற்கு முன்னால் உயரிய பீடம் ஒன்றிலே நவக்கிரக பீடம் அமைந்திருக்கின் றது.

**பர்வதவர்த்தினி அம்மன் கோயில்**

சோழர், பாண்டியர் காலங்களிலும் ஆகமப் பிரகாரமாகத் திருக்காம கோட்டத்தை மூலவர் கோயிலின் இடப்பக்கத்தில் அமைப்பது வழமை. ஆனால், விஜயநகர நாயக்கர் காலங்களில் இதற்கு எதிர்மாறான முறையிற் திருக்காம கோட்டத்தை அமைத்தனர். அக்காலத்தில் அம்மனை இறைவனின் வாம பாகினியாக அன்றி தசஷியபாகினியாகக் கொண்டார். கலியாண வைபவங்களில் மாங்கல்ய தாரணத்திற்கு முன்பு மணப்பெண்ணுக்கே முதன்மை உரியது என்ற கருத்தின் அடிப்படையில் இந்த வழக்கு ஏற்பட்டது. இராமேஸ்வரம், மதுரை, திருநெல்வேலி , திருக்குற்றாலம் முதலிய தலங்களிற் திருக்காம கோட்டம் மூலவர் கோயிலின் வலப்பக்கத்தில் அமைந்துவிடுகின்றது. திருக்காம கோட்டம் அமைந்துள்ள பிரகாரப்பகுதி 40.4 மீற்றர் நீளமும் 18.7 மீற்றர் அகலமுங் கொண்டுள்ளது. கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் ஆகிய இரண்டும் சுமார் 10 மீற்றர் நீளங்கொண்டவை. அவற்றின் அகலம் 4.6 மீற்றர் ஆகும். இறையகம் பிரஸ்தரம் வரை 3.9 மீற்றர் உயரங்கொண்டது. மூலஸ்தானத்திலே பர்வதவர்த்தனியின் படிமம் ஆசன நிலையில் அமைக்கப்பட்டுள்ளது. அர்த்தமண்டபத்து வாசலில் அழகிய சிற்ப வேலைப்பாடுகள் பொருந்திய ஆறு தூண்கள் உள்ளன. அவற்றோடு வேறு பல தூண்களும் அங்குள்ளன.

ஆலயத்தின் பின்னால் தென்மேற்கு மூலையிலே இரட்டை விநாயகரின் கோயில் இருக்கின்றது. இந்தக் கோயிலைச் சந்தான சௌபாக்ய கணபதி கோயில் என்று குறிப்பிடுவர். தென்மேற்கு மூலையிலே அனந்த சயனக் கோலத்திலுள்ள விஷ்ணுவின் கோயில் காணப்படுகின்றது.

**சுக்கிரவார மண்டபம்**

வெள்ளிச் சபுக்கை என்றும் நவசக்தி மண்டபம் என்றுஞ் சொல்லப்படும் நீள்சதுரமான சுக்கிரவார மண்டபம் அம்மன் கோயிலுக்கு முன்னால் அமைந்திருக்கின்றது. அதில் வெள்ளிக்கிழமை தோறும் திருவிழா நடைபெறுவதால் அது சுக்கிரவார மண்டபம் என்று சொல்லப்படும். அதிலே 32 தூண்கள் காணப்படுகின்றன. தேவியின் கோலங்களும் சேதுபதிகளின் உருவங்களும் அவற்றிலே சிற்பங்களாக வடிக்கப் பெற்றுள்ளன. கோயிலையும் மண்டபத்தையும் பிரிக்கின்ற சுவரிலே அஷ்டலக்ஷ்மியின் வடிவங்கள் காணப்படுகின்றன. தென்கிழக்கு மூலையிற் சந்திர சேகரர், பிரமன், விஷ்ணு முதலியோரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்த மண்டபத்திற்கும் இரண்டாம் பிரகாரத்திற்கும் இடையிலே தூண் வரிசைகள் அடங்கிய வேறொரு மண்டபம் உள்ளது. அதன் தூண்களிலே இராமரதும், அனுமாரதும், அடியார்கள் பலரதும் சிற்ப வடிவங்கள் காணப்படுகின்றன.

(தொடரும்)

# போர் முடிந்துவிட்டது ; ஆனால் தமிழ்மக்கள் சிந்தும் குருதி இன்னும் நிற்கவில்லை

## மனோ கணேசன் எம்.பி



இலங்கையில் போர் முடிந்து விட்டது உண்மைதான். ஆனால் எமது மக்கள் சிந்தும் குருதி இன்னும் நிற்கவில்லை. போர் உருவாகியதற்கான மூலகாரணங்களுக்கான தீர்வும் கிடைக்கவில்லை.

இவையிரண்டும் நிகழ்ந்தால் நான் எனது அரசியல் வாழ்வைத் துறந்து தேசியக் கொடியுடன் வீதி உலா வருவேன் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் கொழும்பு ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார். அதன் முழு வடிவம் வருமாறு,

**கேள்வி :** இந்தத் தேர்தலில் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதன் மூலம் தமிழ் மக்களுக்காக எதனைப் பெற நீங்கள் முயல்கிறீர்கள்.

**பதில் :** ஐக்கிய தேசிய முன்னணியின் வலிமை மிக்க பங்காளிகளான நாம் ஒரு தெளிவான அடிப்படையில் பொன்சேகாவை ஆதரிக்கின்றோம். நாட்டில் ஜனநாயகம் முடங்கிவிட்டது.

போர் நிறைவு பெற்ற பின்னர் அமைதியான அரசியல் தீர்வைக் காண்பதற்கு அரசிற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை இலங்கை அரசு தவறவிட்டு விட்டது. அரசினால் தவறவிடப்பட்ட அச்சந்தர்ப்பத்தை மீண்டும் ஏற்படுத்த நாம் பொன்சேகாவை ஆதரிக்கிறோம்.

**கேள்வி :** அவசரகால சட்டத்தை நீக்குவது மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதன் தேவை தொடர்பில் உங்களின் பார்வை என்ன?

**பதில் :** விடுதலைப் புலிகளின் நீண்ட தூர பீரங்கி தாக்குதல்களில் இருந்து படைநிலைகளை பாதுகாப்பதற்கே உயர் பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. நான் முட்டாள் அல்ல. மாறாக பயங்கரவாதியும் அல்ல. எனவே உயர் பாதுகாப்பு வலயத்தின் உருவாக்கத்தின் பின் உள்ள தத்துவம் எனக்குத் தெரியும்.

இது தொடர்பில் நான் பொன்சேகாவுடன் நீண்ட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தேன். இராணுவத் தளபதியாக இருந்த போது போர் நடைபெற்ற சமயம் அவரின் முடிவுகள் சரியானது. ஆனால் அமைதியான காலத்தில் பொதுமக்களுக்கு சேவை செய்யும் அரச தலைவராக உள்ள போது அதனை நீக்க வேண்டுமென நான் அவரிடம் தெரிவித்திருந்தேன்.

தற்போது அரசு போர் முடிந்து விட்டதாக தெரிவிக்கிறது. விடுதலைப்புலிகளின் பீரங்கிப் பலமும் இல்லாது போய்விட்டது. எனவே உயர் பாதுகாப்பு வலயம், அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்பன இல்லாது செய்யப்பட வேண்டும்.

நீங்கள் போரில் வெற்றியீட்டினால், பயங்கரவாதத்தை தோற்கடித்தால், அமைதியை உருவாக்கினால் தமிழ் மக்களுக்கு அந்த அமைதியைத் தாருங்கள். அதுதான் யதார்த்தமானது. தமிழ் மக்களை தண்டிக்க நினைப்பவர்களும், உயர் பாதுகாப்பு வலயம், அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் போன்றவற்றை அகற்ற மறுப்பவர்களும் இனவாதிகள்.

**கேள்வி :** போரின் முடிவை தமிழ் மக்கள் எவ்வாறு பார்க்கின்றனர்?

**பதில் :** போர் முடிவுக்கு வந்தது நல்லது. போரினால் முழு நாடும் பாதிக்கப்பட்டது. ஆனால் நம் தமிழ் மக்களே அதில் அதிகம் பாதிக்கப்பட்டதுடன் தற்போதும் பாதிக்கப்பட்டு வருவது மறுக்க முடியாத உண்மை.

போர் முடிந்து விட்டது உண்மைதான். ஆனால் எமது மக்கள் சிந்தும் குருதி இன்னும் நிற்கவில்லை.

இரண்டாவது போர் முடிந்துவிட்டது. ஆனால் அது உருவாகியதற்கான மூலகாரணங்களுக்கான தீர்வு கிடைக்கவில்லை.

**கேள்வி :** இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் நீங்கள் நிறைவடைகிறீர்களா?

**பதில் :** ஆழிப்பேரலையின்போது ஏற்பட்ட நெருக்கடிகளைவிட இந்த நெருக்கடிகள் அரசிற்கு அதிகம். அதிக எண்ணிக்கையான மக்களே அவர்களுக்குப் பிரச்சினையாக மாறிவிட்டது.

அவர்கள் 70 ஆயிரம் மக்களைதான் எதிர்பார்த்தனர். ஆனால் அது மூன்று இலட்சமாகிவிட்டது. அரச சார்பற்ற நிறுவனங்களையும் அரசு வெளியேற்றிவிட்டது.

சட்டத்திற்குப் புறம்பாகவே அரசு மக்களைத் தடுத்து வைத்திருந்தது. அனைத்துலக சமூகத்துடன் இணைந்து எதிர்க்கட்சிகளாகிய நாம் தேசிய திட்டம் ஒன்றை செயற்திறன் மிக்க முறையில் தயாரித்திருந்தோம். ஆனால் தற்போது என்ன நடைபெறுகின்றது எனப் பாருங்கள்.

தேர்தல் காலம் என்பதால் கடந்த மாதம் அரசு முகாம்களில் உள்ள மக்களை அவசர அவரசமாக விடுவித்து மீள்குடியேற்றியுள்ளது.

அங்கு சரியான கட்டுமானங்கள் இல்லை. மக்கள் தாமாகவே செல்கின்றனர். அரசு றொபேட் பிளேக்கின் உதவியுடன் அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுள்ளது.

அது எந்தப் பலனையும் கொடுக்கவில்லை. வடக்கில் புனரமைப்புப் பணிகளுக்கு என அரசினால் நியமிக்கப்பட்ட நடவடிக்கைக் குழுவின் தோல்வியே இது. இந்த செயற்திட்டத்தில் அனைத்துலக சமூகமோ பிராந்திய மக்களின் பிரதிநிதிகளோ எதிர்க்கட்சிகளோ பங்குகொள்ளவில்லை.

தேர்தல் வாக்களிப்பு நடவடிக்கை கூட மிகவும் மோசமான நிலையை அடையப் போகிறது. தனது வாக்காளர்கள் எங்கு உள்ளனர் என்பதோ அல்லது எங்கு வாக்குச் சாவடிகள் நிறுவப்படப் போகின்றன என்பது குறித்தோ தேர்தல் ஆணையாளருக்கு எதுவும் தெரியாது.

**கேள்வி :** இராணுவத்திடம் சரணடைந்த மற்றும் படையினரால் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் தொடர்பாக உங்களின் கருத்து என்ன?

**பதில் :** விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படுவோரின் பெற்றோர்களும், உறவினர்களும் தூக்கமின்றியுள்ளனர். அரசு தன்னிடம் உள்ளவர்களின் பெயர் விபரங்களையும், அடையாளங்களையும் இதுவரை முழுமையாகத் தெரிவிக்கவில்லை. அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் கூட அதன் சரத்துக்களை ஒழுங்காகப் பின்பற்றவில்லை என்றே நான் நம்புகிறேன். எனவே எல்லோரையும் விடுதலை செய்யுமாறு எம்மால் கேட்கமுடியாதுள்ளது என்றார். (2-6)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### நாவல்

Botanical Name- Eugenia jambolana
Family - Myrtaceae
Engl - Black plum
Sinh - Madon / mahadan

தென் ஆசியா மற்றும் ஆஸ்திரேலியாவினைச் சார்ந்தது நாவல்மரம் ; இந்தியா, இலங்கை போன்ற வெப்பமண்டல பகுதிகளில் வளர்கின்றன. நல்ல சூரிய ஒளியும் நீர் தேங்காத மண்ணும் இதற்கு உகந்தது. வாள்வடிவ இலைகளுடன் 10 மீ உயரம் வளரக்கூடியது; எதிரிலை அடுக்கம் ; மலர்கள் பசும்மஞ்சள் நிறமுடையவை, கனிகள் நீள் கோண வடிவின ; சதைப்பற்றுடன் கருநீல நிறமானவை.

இம்மரம் தை - மாசி மாதங்களில் இலைகளை உதிர்க்கும். பூக்கள் பங்குனி - வைகாசி மாதங்களில் உண்டாகும். நாவல் பழங்கள் ஆவணி - புரட்டாதி மாதங்களில் கிடைக்கும்.

### இனவிருத்தியும், பரம்பலும்

பெரும்பாலும் சாலை ஓரங்களில் குளக்கரை, ஆற்றங்கரைகளில் நாவல் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. பெரும்பாலும் விதை மூலமும், ஒட்டுச் செடிகள் மூலமும் இனப்பெருக்கம் செய்யப்படுகின்றது.

இவை 12 மீ × 12 மீ இடைவெளியினில் நடப்படுகின்றன. நட்ட 8-10 ஆண்டுகளில் விளைவுக்கு வரும். ஒரு மரத்திலிருந்து ச்ராசரியாக ஆண்டொன்றுக்கு 50-80 கிலோ பழங்கள் கிடைக்கும்.

### 100 கிராம் நாவல் பழத்திலுள்ள சத்துக்கள்

புரதம் (கி) - 0.7, கொழுப்பு (கி) - 0.3, காபோவைதரேற்று (கி) - 0.9, கல்சியம் (மி.கி) -14, இரும்பு (மி.கி) - 1.2, தயமின் (மி.கி) - 0.03, ரைபோபிளேவின் (மி.கி) - 0.01, நியாசின் (மி.கி) - 0.2, விற்றமின் சி (மி.கி) - 18, மகனீசியம் (மி.கி) - 35, சோடியம் (மி.கி) - 26.2, ஒக்சாலிக்கமிலம் (மி.கி) - 89, கரோட்டின் (மைக்ரோகிராம்)- 48.

### மருத்துவப் பயன்கள்

➢ பழம் உடலுக்கும், கண்ணிற்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும். பழத்தை சாப்பிட மூளை பலப்படும். ஈரல் நோய் குணமாகும்.




சிறுநீர் வெளியேறுவது அதிகமாகும். பழத்தை உண்ண சீரணமாகும்.

➢ இதன் பழச்சாற்றை வயிற்றோட்டத்தை குணப்படுத்த பயன்படுத்தலாம். பழத்தை குடிநீரிட்டு அருந்த வாய்வுத் தொல்லை நீங்கும்.

➢ பழச்சாற்றுடன் தேன்கலந்து உண்ண பித்த நோய்கள் அகலும். வெயிலின் தாக்கத்தை குறைக்கும்.

➢ நாவல் பழத்தை உப்பில் போட்டு சாப்பிடுவதால் தொண்டைக் கட்டு உண்டாவது குறையும்.

➢ பழுக்காத காய்களை நன்கு உலர்த்தி பொடித்து 1 தேக்கரண்டி எடுத்து மோரில் கலந்து அருந்த வயிற்றுப் போக்கு குணமாகும்.

➢ நாவல் கொட்டையை நன்கு உலர்த்தி பொடி செய்து அரித்து தினந்தோறும் 2-4 கிராம் வீதம் மூன்று வேளை வெந்நீரில் கலந்து அருந்த நீரிழிவு கட்டுப்படும்.

➢ நாவல் விதைகளை பொடித்து மாம் பருப்புத் தூளுடன் சேர்த்து எடுக்க சிறுநீரைப் பெருக்கும்.

➢ நாவல் கொழுந்துச் சாறு, மாவிலைச் சாறு ஆகிய இரண்டையும் கலந்து கடுக்காய் பொடியுடன் சேர்த்து ஆட்டுப்பாலில் கலக்கிக் கொடுக்க சீதக்கழிச்சல் நீங்கும்.

➢ நாவற் கொழுந்தை ஏலத்துடன் சேர்த்து வைத்து ஆட்டுப்பாலில் கலந்து கொடுக்க செரியாக் கழிச்சல் தீரும்.

➢ நாவல் மரப்பட்டை குடிநீரை அல்லது சாற்றை வாய்கொப்பளித்து வர நாக்கு, வாய், தொண்டைப் புண்கள் தீரும்.

➢ மரப்பட்டையை பொடித்து, இடித்து அரித்து 1-2 கிராம் அளவு தயிரில் காலை, மாலை அருந்த பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் எற்படும் அதிக இரத்தப்போக்கு தணியும்.

➢ நாவல் மரப்பட்டைத் தூளை நுண்ணிய பொடியாக்கி இரத்தம் வழிகின்ற புண்ணில் தூவ குணமாகும். அல்லது பட்டைக் குடிநீரைக் கொண்டும் புண்களைக் கழுவலாம்.

➢ நாவல்வேர் ஊறிய குடிநீர் 30-60 மில்லி நீரிழிவு நோயாளிகளுக்கு கொடுக்க இரத்தத்தில் குளுக்கோசின் அளவு கட்டுப்படும்.

➢ நீரிழிவு நோய்க்கு நாவற்கொட்டை உடைத்த பருப்பை ஆடுதீண்டாப் பாளைச் சாற்றில் ஊறவைத்து, மீண்டும் காயவைத்து உலர்த்திய தூளை 5-10 கிராம் அளவு காலை. மாலை கொடுக்க இரத்தத்தின் குளுக்கோசின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

➢ கோப்பி, தேனீர் அதிகளவில் குடித்தால் அடிக்கடி பித்தவாந்தி ஏற்படும். இதற்கு நாவற்பட்டைக் குடிநீரை கற்கண்டு சேர்த்து 3-4 வேளை 10-20 மில்லி அருந்த வாந்தி நிற்கும். செரிமானம் நன்கு நடைபெறும்.

➢ நாவற் பட்டை எரித்த சாம்பலை தேங்காய் எண்ணெயில் மத்தித்துப் போட ஆறாத புண்கள் ஆறும்.


➢ நாவல் பழங்களிற்கு சீனி சேர்த்து சர்பத் செய்தும் அருந்தலாம். இதனால் இதயம் பலப்படும். குருதி ஊறும். இதயத் தசைகள் உறுதிபடும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

### நாவல்பழ மணப்பாகு

பழச்சாறு அரை லீற்றர், கற்கண்டு 300 கிராம் ஏலம் 1 கிராம், பன்னீர் 30 மில்லி குங்குமப்பூ 2 கிராம் கலந்து காய்ச்சி மணம் வரும் பதத்தில் வடித்து வைக்கவும். உடல் கட்டுக் கோப்பிற்கு சிறந்த பானமாகும்.

# சுவாமி விவேகானந்தரும் நவீன உலகமும்



சமயம் என்பது அனுபூதி, இறைவனை நேரில் தரிசிப்பது, இறைவனுடன் கலந்து, உறவாடச் செய்யாவிட்டால் நமது போலித்தன்மையை வெளிச்சம் போட்டுப்பார்க்கலாம். 39 ஆண்டுகள் சுவாமி விவேகானந்தர் வாழ்ந்து சொல்லிய விடயங்களை ஆராய ஒரு வருடம் போதாது.

பாம்பனிலிருந்து விவேகானந்தர் இராமேஸ்வரம் கோயிலுக்குச் சென்றார். அங்கு கூடியிருந்த மக்கள் அவரிடம் ஓரிரு வார்த்தைகள் பேசுமாறு கேட்டுக்கொண்டனர். விவேகானந்தர் பேசியதை நாகலிங்கம் என்பவர் தமிழில் மொழிபெயர்த்தார்.

தாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம். பிறகு ஒரு தீர்த்தத் தலத்திற்குச் சென்றால் அந்தப் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிடும் என்று நினைக்கும் அளவிற்குக் கீழான நிலைக்கு இந்தக் கலியுகத்தில் மக்கள் வந்துவிட்டனர்.

தூய்மையற்ற உள்ளத்துடன் கோயிலுக்குச் செல்கின்ற ஒருவன் ஏற்கனவே இருக்கின்ற தன் பாவங்களுடன் மேலும் ஒன்றைக் கூட்டுகிறான். புறப்பட்டபோது இருந்ததைவிட மோசமானவனாக வீடு திரும்புகிறான். தீர்த்தத் தலங்கள் புனிதமான பொருட்களா லும் மகான்களாலும் நிரம்பியிருப்பவை. மான்கள் வாழ்கின்ற இடங்களில் கோயில் எதுவும் இல்லையென்றாலும் அந்த இடங்கள் தீர்த்தத் தலங்களே.

நூறு கோயில்கள் இருந்தாலும் அங்கே புனிதமற்றவர்கள் இருப்பார்களானால் தெய்வீகம் மறைந்துவிடும். தீர்த்தத் தலங்களில் வாழ்வது மிகவும் கடினமான காரியம். சாதாரண இடங்களில் செய்யப்படும் பாவங்களை எளிதாக நீக்கிக் கொள்ள முடியும். ஆனால் தீர்த்தத் தலங்களில் செய்யப்படும் பாவத்தை நீக்கவே முடியாது.

மனத் தூய்மை, பிறருக்கு நன்மை செய்வது. இதுவே எல்லா வழிபாடுகளின் சாரமா

## இன்று சுவாமி விவேகானந்தரின் 148 ஆவது ஜென்ம தினம்

கும். ஏழையிடமும் பலவீனரிடமும் நோயுற்றோரிடமும் சிவபெருமானைக் காண்பவனே உண்மையில் சிவபெருமானை வழிபாடுகிறான். விக்கிரகத்தில் மட்டும் சிவபெருமானைக் காண்பவனின் வழிபாடு ஆரம்ப நிலையில் உள்ளது.

ஒரே ஓர் ஏழைக்காயினும் அவனது ஜாதி, இனம், மதம் போன்ற எதையும் பாராமல் அவனிடம் சிவபெருமானைக் கண்டு அவனுக்கு உதவிகள் செய்து தொண்டாற்றுபவனிடம் சிவபெருமான் மிகவும் திருப்தி கொள்கிறார். கோயிலில் மட்டும் தம்மைக் காண்பவனைவிட இவனிடம் அதிக மகிழ்ச்சி கொள்கிறார்.

மற்றவர்களுக்கு முன்னாள் நான் சொர்க்கத்தை அடைய வேண்டும். எல்லோருக்கும் முன்னால் நான் முக்தி பெறவேண்டும் என்றெல்லாம் நினைப்பவன் சுயநலவாதி. சுயநல மற்றவனோ, 'நான் கடைசியில் இருக்கின்றேன்.சொர்க்கம் சொல்வதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் நரகத்திற்கு செல்வதால், என் சகோதரர்களுக்கு உதவமுடியுமா னால் அதற்கும் தயாராக இருக்கின்றேன்' என்கின்றான்.

இத்தகைய சுயநலமற்ற தன்மையே மதத்திற்கான உரைக்கல். சுயநலம் இல்லாதவனே மேலான ஆன்மீகவாதி. அவனே சிவபெருமானுக்கு அருகில் இருக்கின்றான். அவன் படித்தவனாக இருந்தாலும் படிக்காதவனாக இருந்தாலும் அவன் அறிந்தாலும் அறியவில்லை என்றாலும் அவனே மற்ற அனைவரையும்விட சிவபெருமானுக்கு அருகில் இருக் கின்றான்.

சுயநலம் கொண்டவன் எல்லா கோயில்களையும் வழி பட்டிருந்தாலும் புண்ணியத் தலங்கள் அனைத்தையும் பார்த் திருந்தாலும் சிறுத்தையைப் போல் தன் உடம்பு முழுவதிலும் மதச் சின்னங்களைத் தீட்டிக்கொண்டிருந்தாலும் அவன் சிவபெருமானிடமிருந்து விலகியே இருக்கின்றான்.

இனி நிஜவாழ்க்கைக்கு வருகிறோம். ஆலயவழிபாட்டின் அர்த்தம் என்ன? ஆலயம் கடவுள் இருக்கிறார் என்பதை காட் டும் இடம். ஆலயத்தில் காணும் விக்கிரகத்தில் உள்ள இறை வனை எம்மனத்தில் காணவேண்டும். பின்பு அதே இறைவனை எல்லோரிடத்திலும் காணவேண்டும்.

பகவத்கீதையில் தியான யோகம் 06 ஆம் அத்தியாயம் 30ஆம் சுலோகம் 'என்னை எங்கும் காண்பவன், எல்லோரிடத்திலும் என்னைக் காண்பவன், இந்தப் பக்தனை நான் இழப் பதும் இல்லை. எனது பார்வையிலிருந்து இவன் விலகுவதும் இல்லை' என்கிறது.

**சிவதொண்டன்**

## சந்திரசேகரனின் வெற்றிடத்திற்கு கருப்பையா கனகரட்னம்

(கொழும்பு)

மறைந்த மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரனின் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திற்கு கருப்பையா கனகரட்னம் என்பவரை நியமிப்பதற்கு கட்சி தீர்மானித்துள்ளதாக லக்பிம செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் சந்திரசேகரனின் திடீர் மரணத்தினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு கடந்த 2004ஆம் ஆண்டில் கட்சியின் சார்பில் போட்டியிட்ட கருப்பையா கனகரட்ணத்தை நியமிப்பதென கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

கடந்த தேர்தலில் முன்னாள் மத்திய மாகாண கல்வி அமைச்சர் அருள்சாமியும் மலையக மக்கள் முன்னணியின் சார்பில் போட்டியிட்டு இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் அருள்சாமி தற்போது வேறொரு தொழிற்சங்கத்தை உருவாக்கி அதனை வழி நடத்தி வருகின்ற காரணத்தினால் அவரை தமது கட்சி பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்ய முடியாது மலையக மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் எஸ். விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணி கட்சியின் சார்பில் போட்டியிட்டவர்களின் பட்டியலில் கருப்பையா கனகரட்ணம் முன்னணி வகிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் படி அமரர் சந்திரசேகரரின் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காக கருப்பையா கனகரட்ணம் நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு அமரர் சந்திரசேகரின் பாரியாரான சாந்திதேவி சந்திரசேகரனை மத்திய செயற்குழு ஏக மனதாகத் தெரிவு செய்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6)

## எதிர்வரும் 15ஆம் திகதி சூரிய கிரகணம்

### வடபகுதியில் முழுமையாக பார்க்கலாம்

(கொழும்பு)

இம் மாதம் 15 ஆம் திகதி சூரியகிரகணம் தோன்றவுள்ளது என ஆதர் சி.கிளார்க் கேந்திர நிலையம் அறிவித்துள்ளது.

இந்த சூரியகிரணத்தை வட பகுதியில் முழுமையாகவும் அநுராதபுரத்தின் தென்பகுதியில் பகுதி அளவிலும் பார்வையிடலாம் என அந்த நிலையம் குறிப்பிட்டுள்ளது.

அவ்வாறு பார்க்கின்றவர்கள் பாதுகாப்பான கண்ணாடி ஊடாகவே பார்க்க வேண்டும் என நிலையம் கேட்டுள்ளது.

அவ்வாறில்லாமல் நேரடியாகப் பார்த்தால் கண்கள் பாதிப்புக்குள்ளாகி பார்வையை இழக்கவும் நேரிடலாம் என அந்த நிலையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (2-6)

## மீளக்குடியேறும் கனவில் வந்தோம்; சொந்த வீடு அருகிலிருந்தும் செல்ல முடியவில்லை

### கிளி.மத்திய கல்லூரியில் தங்கியுள்ள மக்கள்

(கொழும்பு)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த நிலையில் மீள் குடியேற்றத்திற்காக கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்ட 75 குடும்பங்களைச் சேர்ந்த 250 பேர் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக பாடசாலையில் தங்க வைக்கப்பட்டுள்ள தம்மை மீளக் குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு இவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

கடந்த டிசம்பர் மாதம் முதலாம் திகதி இவர்கள் வவுனியா நலன்புரி முகாம்களில் இருந்து மீளக் குடியேற்றுவதற்காக கிளிநொச்சிக்கு அழைத்து வரப்பட்டனர். தற்போது கரைச்சி, திருநகர், உதயபுரம், கனகபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இந்த மக்கள் மீள் குடியேற்றப்படாத நிலையில் அடிப்படை வசதிகள் எதுவுமற்று மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மத்திய கல்லூரியில் தங்க வைக்கப்பட்டுள்ள குடும்பஸ்தர் ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில்,

எம்மை மீளக் குடியேற்றப்போவதாகக் கூறி அழைத்து வந்தனர். நாமும் மிகுந்த மகிழ்ச்சியுடன் சொந்த இடங்களுக்கு திரும்புவதற்காக வருகை தந்தோம். ஆனால் எம்மை எமது ஊருக்கு அனுப்பாது கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக பாடசாலையில் தடுத்து வைத்துள்ளனர். இங்கிருந்து வெளியில் எங்கும் போக முடியாத நிலை காணப்படுகின்றது.

நாளை குடியேற்றுவோம் ,அடுத்த வாரம் குடியேற்றுவோம் எனக் கூறி அதிகாரிகள் எம்மை ஏமாற்றி வருகின்றனர். இதனால் நாம் எதனையும் செய்ய முடியாத நிலையில் இங்கு அடைந்து கிடக்கின்றோம்.

எமது சொந்த இடம் அருகில் இருக்கின்ற போதும் அங்கு செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

அதிகாரிகள் உணவுப்பொருட்களை வழங்குகின்றன. அதனைக் கொண்டு நாம் சமைத்து உண்ணுகின்றோம். நாள் தோறும் சோறும் பருப்புக்கறியுமே உண்ண வேண்டிய நிலை காணப்படுகின்றது.

மேலும் மீள் குடியேற்றம் என்ற போர்வையில் எம்மை அழைத்து வந்து பாடசாலையில் அடைத்து வைத்திருப்பது எந்த வகையிலும் நியாயமானது அல்ல என்று தெரிவித்துள்ளார். (2-6)

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இவ்வருடம் இழப்பீடு அதிகமாகியுள்ளது

### ரவி கருணாநாயக்கா



(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த வருடம் 9.1 பில்லியன் ரூபாய்களை இழந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடந்த வருட இழப்பு 9.1 பில்லியன் ரூபாய்களாகும். ஆனால் கடந்த ஒக்டோபர் மாதம் வரையிலும் 3.1 பில்லியன் ரூபாய்களை இழந்துள்ளதாக அதன் தலைவர் அசோக தொரதேனியா எம்மிடம் தெரிவித்தார்.

முழு வருடத்திற்குமான இழப்புத் தொலையைத் தாம் கணிப்பிடவில்லை எனவும் அவர் தெரிவித்திருந்தார். ஆனால் எமக்குக் கிடைத்த தகவல்களின்படி இழப்பீடு அவர் குறிப்பிட்ட தொகையைவிட மிக அதிகம்.

நான்இங்கு வெளியிட்டுள்ள தகவல்கள் நம்பகமான வட்டாரங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டவை. அரசியல் மயப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கையே இதற்குக் காரணம்.

இந்த இழப்பானது மக்களின் பணத்திற்கு ஏற்பட்ட இழப்பு. எரிபொருளின் விலையைக் குறைக்குமாறு உயர் நீதிமன்றம் உத்தரவிட்டபோது அது குறைக்கப்படவில்லை. ஆனால் தற்போது தேர்தல் பரப்புரைகளுக்காக அது குறைக்கப்பட்டுள்ளது.

உலகச் சந்தையில் தற்போது எண்ணெய் விலை உயர்ந்துள்ளதால் அரசின் இந்த நடவடிக்கையினால் மேலும் 155 மில்லியன் ரூபாய்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது எனஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-6)

## நாம் போருக்கு 23ஆயிரம் மில்லியன் ரூபாய்களை செலவளித்துள்ளோம்

### மஹிந்த பெருமிதம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுடன் நடைபெற்ற மூன்று வருடகால போரில் எனது அரசு 23, 000 மில்லியன் ரூபாய்களை செலவிட்டுள்ளது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை றுவான்வெல பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிதவாகா இராட்சியம் வெளிநாடுகளின் அழுத்தத்திற்கு உட்பட்ட போது மக்கள் அதனை முறியடித்திருந்தனர். துன் கோரல மக்கள் நாட்டுப் பற்று மிக்கவர்கள். கலா நிதி என்.எம். பெரேரா போன்ற தலைவர்களை நாட்டுக்கு வழங்கிய மண் அது.



தற்போது வரலாறு மீண்டும் திரும்புகின்றது. இலங்கைக்கு வெளிநாட்டு சக்திகளால் ஆபத்துக்கள் உண்டு. எனவே மக்கள் ஒன்று திரண்டு அதனை முறியடிக்க வேண்டும் என்றார். (2-6)

# கால்கோள் விழா

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்தில் தரம் -1 மாணவர்களுக்கான கால்கோள்விழா எதிர்வரும் 18ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (4-19)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மேற்கு பருத்திக்கலட்டி ஞான வைரவர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம் பெறவுள்ளதுடன் தொடர்ந்து விசேட பூசைகளும் நடைபெறவுள்ளதாக தேவஸ்தானத்தினர் தெரிவித்துள்ளனர். (6-4)

# சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளுக்கான திட்ட முன்மொழிவுகள் தொடர்பானது

வடக்கு-கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையின் பெயரில் உறுதியுள்ள சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் அல்லது உரித்துக்கான உறுதியுள்ள சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள் தங்கள் திட்டமுன்மொழிவுகளை 11-01-2010 இற்கு முன்னர் தலைமையலுவலத்திற்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விபரங்கள் தேவைப்படின் தலைமையலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாமெனவும் பிரதேச சபையின் செயலாளர் தெரிவிக்கின்றார்.

அத்துடன் இத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான கலந்துரையாடலொன்று மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம் ஆகியவற்றிற்கு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு மானிப்பாய் பட்டின கலாசார மண்டபத்திலும் பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆகியவற்றிற்கு எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை முற் பகல் 10.00 மணிக்கு பண்டத்தரிப்பு பட்டினத்திலும் நடை பெறவிருப்பதனால் குறித்த சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகளை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் திருமதி கு. சிவலிங்கம் கேட்டுக்கொள்கின்றார். (2-6)

# இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வவுனியா அமதிகள் கலைத்தொடர்பு நிலையத்தினால் வெளியிடப்படும் கரவையூர் செல்வத்தின் 'உனக்கு நீதான் தலைவன்/வி' என்னும் இறுவட்டு வெளியீடு நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இல.657 மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் மாகாண அமதிகள் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். (6-4)




# வீட்டு உரிமையாளர்கள்/ குடியிருப்பாளர்களுக்கு

யாழ். மாவட்டத்தில் தற்போது டெங்கு காய்ச்சல் தீவிரமாகப் பரவி வருகின்றது. இதுவரை 400 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்டு 8 இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இந்நோயைக் கட்டுப்படுத்த அனைத்து வீட்டு உரிமையாளர்களினதும், குடியிருப்பாளர்களினதும் ஒத்துழைப்பும்,பங்களிப்பும் மிக அவசியம். உங்கள் வீட்டு வளவில் உற்பத்தியாகும் டெங்கு பரப்பும் நுளம்புகளால் முதலில் உங்கள் குடும்பத்தினருக்கே ஆபத்து என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும். எனவே பின்வரும் செயற்பாடுகள் மூலம் டெங்கு கட்டுப்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகின்றோம்.

- டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் சிரட்டைகள்,இளநீர் கோம்பைகள்,பொலித்தீன் பைகள்,தகரப்பேணிகள், பிளாஸ்ரிக் கொள்கலன்கள், பழைய ரயர்கள் என்பவற்றை எரிக்க வேண்டும் அல்லது புதைக்க வேண்டும். இதற்கான வசதிகள் இல்லாதவிடத்து உள்ளூராட்சி மன்ற குப்பையகற்றும் வாகனங்கள் மூலம் வெளியே அகற்ற வேண்டும்.
- மீன் தொட்டிகளின் நீரை வாரத்திற்கு இருதடவை மாற்ற வேண்டும்.
- தண்ணீர் பீலிகளில் நீர் தேங்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

## டெங்கு கட்டுப்பாட்டு வாரம்

- கழிவுநீர் வடிகால்களில் நீர் தேங்காதவாறு அகற்ற வேண்டும்.
- பூச்சாடிகளின் கீழ் உள்ள தட்டில் தங்கியுள்ள நீரை தினமும் அகற்ற வேண்டும்.
- வீட்டுச் சுற்றாடலை புல், பூண்டுகள், பற்றைகளின்றி துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.
- யாழ். மாவட்டத்தில் உரிமையாளர்கள் இன்றி பராமரிப்பின்றி இருக்கும் காணிகளால் டெங்கு நுளம்புகள் பெருகுகின்றன. இவற்றை பராமரிப்பவர்கள் உடனடியாக சுத்திகரிக்க நடவடிக்கை எடுக்க வேணடும். இன்றேல் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட நிர்வாகத்தினர் நிர்ப்பந்திக்கப்படுவர்.

# தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களுக்கு

யாழ். மாவட்டத்தில் தற்போது பரவி வரும் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு இறந்தவர்களில் பெரும்பாலானோர் மாணவர்களே. மாணவர்கள் மத்தியில் இந்நோய் தீவிரமாகப் பரவும் அபாயமுள்ளது. டெங்கு நோயை பரப்பும் நுளம்புகள் பெரும்பாலும் காலை 6 மணி முதல் 9 மணிவரையும் மாலை 3 மணி முதல் 6 மணிவுரையுமே கடிக்கின்றன. பெரும்பாலான தனியார் கல்விநிலையங்கள் இந்நேரங்களிலேயே இயங்குகின்றன. தனியார் கல்வி நிலையங்கள் மூலம் டெங்கு நோய் தீவிரமாக பரவலாம்.

எனவே அனைத்து தனியார் கல்வி நிலைய உரிமையாளர்களும் தத்தமது கல்வி நிலையங்களை டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகாதவாறு உடனடியாக துப்புரவு செய்ய வேண்டும். பொது சுகாதார பரிசோதகர்கள் ஒவ்வொரு தனியார் கல்விநிலையத்தையும் சோதனையிடுவர். டெங்கு நுளம்புகள் பெருகும் படி காணப்படும் தனியார் கல்விநிலையங்களை உடனடியாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவை சரியான முறையில் சுத்திகரிக்கப்பட்ட பின்னரே மீள திறக்க அனுமதி வழங்கப்படும். எனவே தத்தமது தனியார் கல்வி நிலையங்களை சுத்திகரித்து டெங்கு நோய் கட்டுப்பாட்டில் ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகின்றேன்.

வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன்
பிராந்திய பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

# வங்கித்தேவைகள் தொடர்பாக யாழ் மக்களுடன் மக்கள் வங்கி உயரதிகாரிகள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்ட மக்களின் வங்கித் தேவைகளை இனங்கண்டறிவதற்காகவும் புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் மக்கள் வங்கியின் உயர் மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளது.

மக்கள் வங்கியின் உதவிப் பொதுமுகாமையாளர்களான கே. பி. ராஜபக்ஷ, எஸ்.ஏ. ஆர். எஸ். சமரவீர, ஜி.ஜி. சி. ஆரியரட்ன, ஆர்.எம். எஸ்.பி.ரட்னாயக்க ஆகியோர் இடம்பெற்றுள்ள இக் குழுவானது கிராமங்கள் தோறும் விஜயங்களை மேற்கொண்டு அவ்வப்பகுதி மக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருகின்றது.

இதன் முதற்கட்டமாக நேற்று முன்தினம் பருத்தித்துறை பிரதேசத்தில் பொலிகண்டி, மந்திகை, கற்கோவளம் போன்ற கிராமங்களுக்கும் நெல்லியடி பிரதேசத்தில் கரணவாய், கட்டைவேலி, வதிரி போன்ற கிராமங்களுக்கும் மற்றும் வல்வெட்டித்துறை பிரதேசத்தில் ஆதிகோவிலடி, கம்பர்மலை, வல்வெட்டி போன்ற கிராமங்களுக்கும் இக்குழுவினர் விஜயம் செய்து மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் தேவைகளை கண்டறிந்துள்ளனர்.

தொடர்ந்து நேற்றையதினம் அச்சுவேலி பிரதேசத்தில் புத்தூர் கிழக்கு, ஆவரங்கால் கிழக்கு, இடைக்காடு ஆகிய கிராமங்களுக்கும் சங்கானை, பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை ஆகிய கிராமங்களுக்கும் சுன்னாகம் பிரதேசத்தில் அளவெட்டி, நீர்வேலி தெற்கு மற்றும் சுன்னாகம் மக்கள் வங்கிக்கிளையிலும் இக் கலந்துரையாடலை நடாத்தியுள்ளனர்.

இதன் தொடர்ச்சியாக இன்று யாழ் நகர பகுதி மற்றும் சுதுமலை சண்டிலிப்பாய் பகுதிகளிலும் நாளைய தினம் உரும்பிராய், பாஷையூர், கொழும்புத்துறை, ஊர்காவற்றுறை, வேலணை, கோண்டாவில், கொக்குவில் மற்றும் கல்வியங்காடு பகுதி மக்களுடனும் மேற்படி கலந்துரையாடல்கள் இடம்பெறவுள்ளன.

பிரதேச ரீதியாக நடைபெறுகின்ற இக் கலந்துரையாடல்களில் கலந்து கொள்வதனூடாக சகல மக்களும் மக்கள் வங்கியின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் புதிய கடன் வசதிகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என மக்கள் வங்கியின் வட வலய உதவிப் பொது முகாமையாளர் த.க. ஆனந்தராசா தெரிவித்துள்ளார். (2-6)

# நூல் வெளியீட்டு விழா

(அல்வாய்)

பிள்ளைக்கல்வி வ. கிவராஜசிங்கம் எழுதிய 'கனகை விநாயகர் பிள்ளைத் தமிழ்' என்னும் நூல்வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கரவெட்டி கிழக்கு கனகராவளவு பிள்ளையார் ஆலய முன்றலில் ஆசிரிய ஆலோசகர் ஐ. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூலாசிரியர், உரையாசிரியர் சிலேடைக்கல்வி இரத்தினம், க. கணபதிப்பிள்ளை ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தொடர்ந்து வாழ்த்துரையை வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா வழங்கவுள்ளதுடன் நூல் வெளியீட்டுரையை வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ. சிவநாதன், ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை போராசிரியர் சி. சிவலிங்கராஜா ஆகியோர் வழங்கவுள்ளனர். (6-4-19)

# கூரைத் தகடுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்கு நலன்புரி நிலையங்களில் இருந்து இடம் பெயர்ந்து வந்த 60 குடும்பங்களுக்குமென 600 கூரைத் தகடுகள் அண்மையில் நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது.

ஒரு குடும்பத்திற்கு 10 கூரை தகடுகள் வீதம் வழங்கவுள்ளதாக பிரதேச செயலகத்தினர் தெரிவித்துள்ளனர். (6-30)

# பொன்விழா

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொன்விழா எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை முதல் எதிர்வரும் 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இவ்விழாவை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டி மற்றும் தடகள சுவட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதுடன் விழாவில் சங்கத்தின் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (4-36)





யா/ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தில் நடைபெற்ற கணிதபாட பாசறை நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ. ரவீந்திரன், சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராஜா, ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ. குகதாசன் ஆகியோர் வித்தியாலய அதிபர் ஆசிரியர்களால் வரவேற்கப்படுவதையும், கணிதபாட பாசறையில், மாணவர்கள் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம்.

# நிலக்கடலைப் பயிர்ச்செய்கை

**முக்கியத்துவம்:-**

யாழ்ப்பாண மாவட்டத்தில் நிலக்கடலைச் செய்கையானது பணப்பயிர்களில் ஒன்றாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. மிளகாய், வெங்காயம், போன்ற பணப்பயிர்களுடன் ஒப்பிடும் போது இலகுவில் உற்பத்தி செய்யக்கூடியதும், நீர்ப்பாசனம், இரசாயனப்பீடைநாசினிப் பாவனைகுறைவு என்பதனால் உற்பத்திச்செலவு குறைவான பயிராகவும் காணப்படுகின்றது. மேலும் நிலக்கடலையானது மண்ணில் நைதரசனைப் பதிப்பதால் மண்வளம் அதிகரிக்கும். இதனால் இதனைத்தொடர்ந்து நாட்டப்படும் பயிர்களின் வளர்ச்சி, உற்பத்தி அதிகரிக்கும்.

**போசணைப்பெறுமானம்.**

நிலக்கடலையில் 13 வகையான விற்றமின்களும், 26 வகையான கனிப்பொருட்களும் காணப்படுகின்றது. நிலக்கடலையில் இறைச்சியிலும் அதிகமாக புரதம், கனிப்பொருட்கள், விற்றமின்கள் என்பன காணப்படுகின்றன. மேலும் நெய்யினைவிட அதிகளவான எண்ணெய் காணப்படுகின்றது.

100கிராம் நிலக்கடலையில் எண்ணெய் - 46 கிராம் ஆகவும், 27.7கிராம் ஆகவும் காணப்படுகின்றது.

நிலக்கடலையானது சிறுவர் தொடக்கம் பெரியோர்வரை எல்லோராலும் விரும்பி உண்ணப்படுகின்றது. கச்சான்பிஸ்கட், கச்சான்அல்வா, மிக்சர், கச்சான்பகோடா, அவித்தகச்சான், வறுத்தகச்சான், பொரித்து சுவையூட்டப்பட்ட கச்சான், கேக் போன்ற பல உணவுப்பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. கால்நடைகளுக்குப் புல்லுக்கிடைக்காத காலத்தில் நிலக்கடலைத் தாவரத்தின் இலைகள் சிறந்த உணவாகப் பயன்படுத்தப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த 2008.˙.2009 காலபோகத்தில் 166ha விஸ்தீரணத்திலும், 2009 சிறுபோகத்தில் 170ha விஸ்தீரணத்திலும் செய்கைபண்ணப்பட்டுள்ளது. இதை மேலும் அதிகரிப்பதற்காக கிராம எழுச்சித்திட்டத்தின் கீழ் இப்பயிரை உற்பத்தி செய்யக்கூடிய கிராமங்கள் இனங்காணப்பட்டு 2009.˙.2010 பெரும்போகத்தில் 320ha விஸ்தீரணத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு உள்ளீடுகள் வழங்கப்பட்டுவருகின்றன. இத்திட்டதிற்கு 1610 பயனாளிகள் 10 பிரதேசசெயலர் பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். ஒரு பயனாளிக்கு 1000 சதுரமீற்றரில் செய்கை மேற்கொள்வதற்காக 10 கிலோ திஸ்ஸ வர்க்க விதை, அசேதனபசளை, அகிழான் பொறி ஒன்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

சண்டிலிப்பாய் விவசாயப் போதனாசிரியர் பிரிவில் பயனாளி ஒருவர் நிலக்கடலை விதையைப் பெற்றுக்கொள்கின்றார்.



திட்டத்தில் வழங்கப்படும் உள்ளீடுகளும் மாவட்டத்திலுள்ள பயிர்ச்செய்கை வளங்களையும் சிறப்பாகப் பயன்படுத்தி உச்சப்பயன்பாட்டைப் பெறுவதற்கு நிலக்கடலைப் பயிர்ச்செய்கையில் கடைப்பிடிக்கக்கூடிய தொழில்நுட்ப விடயங்கள் இக்கட்டுரையில் தொகுக்கப்பட்டுள்ளது.

**தாவர இயல்பு:-**

நிலக்கடலை இனங்கள் இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1.செடியாக வளர்வன.

2.படர்ந்து வளர்வன.

இந்தி, திஸ்ஸ போன்ற தற்போது சிபாரிசு செய்யப்பட்ட இனங்கள் செடியாக வளர்வன. இப்பயிர்களின் அடிப்பகுதியில் விதைகள் கூட்டமாக காணப்படுவதனால் கூடிய விளைவினைப் பெற்றுக்கொள்ளமுடியும். படர்ந்து வளர்கின்ற இனங்களில் விதைகள் ஐதாக இருப்பதனால் விளைவும் குறைவாகக் காணப்படும்.

**மண்ணும் காலநிலையும்:-**

நன்கு நீர்வடிப்புள்ள மணல், இருவாட்டி தரை மிகவும் சிறந்தது. நீர்ப்பாசன வசதியுள்ள இடங்களிலும், மானாவாரியாக மேட்டு நிலங்களிலும் செய்கை பண்ணமுடியும். விதைகள் முளைப்பதற்கு சிறப்பான வெப்பநிலை $30^0$ c ஆகும்.

**நிலப்பண்படுத்தல்:-**

நிலத்தை 15-20செ.மீ ஆழத்திற்கு உழுது மண்ணை நன்கு தூர்வையாக்க வேண்டும். நடுகையின் போது மண்ணின் ஈரப்பதன் கூடுதலாக இருக்குமாயின் முளைத்தல் வீதம் குறைவதுடன் வேர் வளர்ச்சியும் குறைவாகவே காணப்படும்.

**சிபாரிசு செய்யப்பட்ட இனம்:-**

விவசாய திணைக்களத்தால பினவரும் இனங்கள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன. எனினும் யாழ் மாவட்டத்திற்கு மிகவும் பொருத்தமான இனமாக திஸ்ஸ, இந்தி என்பவை காணப்படுகின்றன.

(தொடரும்)

**சி. சிவகுமார்**
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி), யாழ்ப்பாணம்.

**வழங்கப்படவுள்ள உள்ளீடுகள்**

| பி.செ.பி | வி.போ பிரிவு | பயனாளிகள் எண்ணிக்கை | பயிர்ச் செய்கை விஸ்தீரணம் (ஹெக்ரயர்) | மொத்த விதை அளவு(கி.கி) | வழங்கப்படவுள்ள இரசாயனப் பசளை (கி.கி) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | யூரியா | ரி.எஸ்.பி | எம்.ஓ.பி |
| வேலணை | வேலணை | 30 | 03 | 300 | 60 | 120 | 90 |
| ஊர்காவற்றுறை | ஊர்காவற்றுறை | 30 | 03 | 300 | 60 | 120 | 90 |
| காரைநகர் | காரைநகர் | 50 | 05 | 500 | 100 | 250 | 150 |
| சங்கானை | சங்கானை | 300 | 30 | 3000 | 1050 | 150 | 3 |
| நல்லூர் | நல்லூர் | 15 | 1.5 | 150 | 97.5 | 75 | 75 |
| தெல்லிப்பளை | தெல்லிப்பளை | 220 | 22 | 2200 | 660 | 1110 | 660 |
| சாவகச்சேரி | சாவகச்சேரி | 600 | 60 | 6000 | 1650 | 3000 | 1800 |
| பருத்தித்துறை | பருத்துறை | 105 | 10.5 | 1050 | 367.5 | 525 | 315 |
| மருதங்கேணி | அம்பன் | 20 | 02 | 200 | 40 | 40 | 40 |
| மொத்தம் | | 1610 | 161 | 16100 | 4569 | 7930 | 4840 |

# நெல் எரிபந்த நோயைக் கட்டுப்படுத்தல்

தென்மராட்சியில் மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, மட்டுவில் வடக்கு, மட்டுவில் தெற்கு, சரசாலை வடக்கு, சரசாலை தெற்கு, நுணாவில் பகுதி போன்ற வயல் வெளிகளில் நெல் எரிபந்த நோயின் தாக்கம் BG - 406, Ax-402, H4 ஆகிய வர்க்கங்களில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

நெற்ப் பயிரைப் பாதிக்கும் முக்கிய நோய்களில் இதுவும் ஒன்றாகும். இந்நோய் நாற்றுப் பருவத்திலோ அல்லது பூக்கும் பருவத்திலோ பாதிப்பை ஏற்படுத்தும்போது முழுப்பயிரும் அழியலாம்.இது ஒரு வகை பங்கசினால் ஏற்படுகின்றது.

**நோய் அறிகுறிகள்**

இந்நோய் ஏற்படுத்தும் பங்கசுகளின் வித்திகளால் இலைகள் மட்டுமல்லாது இலைமடல், கணு, கதிரின் கழுத்து, மணிகள் போன்றவற்றிலும் பாதிப்பு ஏற்படும். இலைகளில் தோன்றும் புள்ளிகள் நாளடைவில் நீட்சியடைந்து கூம்பு வடிவாக மாறும். இப்புள்ளிகளின் நடுவில் சாம்பல் அல்லது வெள்ளை நிறமாகக் காணப்படும். இப்புள்ளிகளைச் சுற்றி கபில நிறமாக அல்லது கபிலச் சிவப்பு நிறமாகக் காணப்படும். புள்ளிகளின் நிறம், வடிவம் என்பன காலநிலை, பயிர், வயது, எதிர்ப்புத் தன்மை என்பவற்றுக்கு ஏற்ப வேறுபடும். இலைகளில் இப்புள்ளிகள் ஒன்று சேர்ந்து உலர்ந்து வைக்கோல் நிறத்தில் காணப்படும். இதன் காரணமாக நிரம்பாத மணிகளும், முதிராத மணிகளும் தோன்றும்.

**சு. விஜயகுமார்**
விவசாயப் போதனாசிரியர், சாவகச்சேரி.

மணிகளில் தொற்று ஏற்படுமாயின் ஆழமான கபில நிறப்புள்ளிகள் தோன்றும். இதனால் மணிகளின் தரம் குறைவடையும். அடுத்த போகத்திற்கு விதை நெல்லாகப் பயன்படுத்த முடியாது. கதிரின் கழுத்துப் பகுதியில் தொற்று ஏற்படின் கதிர்கள் சரியும். அறுவடையின்போது கதிர் முறிந்து விளைவு இழப்பை ஏற்படுத்தும்.

**பங்கசு தொற்றுவதற்குச் சாதகமான நிலைமைகள்**

காலை நேரத்தில் உயர் சாரீரப்பதன் (90%), குறைந்த இரவு வெப்பநிலை (20°C-24°C), மப்பு மந்தார்மான நிலை, இரவில் பனி இருந்தல், சிபார்சிற்கு மேலதிகமான யூரியாவை இடல்.

**முகாமைத்துவ முறைகள்**

**01) பயிராக்கவியல் முறைகள்**

வரம்புகளிலும், பயிர்களிடையேயும் களைகள் இன்றி பராமரித்தல், யூரியாவை சிபார்சிற்கு ஏற்ப தேவையானபோது தேவையான அளவில் பகுதி பகுதியாக இடல்.

**02) இராசயன முறை**

விதைத்ததில் இருந்து பாற்பருவம் வரை ஒழுங்காக கவனித்தல் அவசியம். நோய்த் தொற்று அறிகுறி காணப்பட்டால் பின்வரும் பங்கசு நாசினிகளில் ஒன்றை விசுறல் வேண்டும்.

| பங்கசு நாசினி | கலவை அளவு | 16 லீற்றர் தாங்கிக்கு | ஏக்கருக்குத் தேவையான அளவு |
|---|---|---|---|
| பியுஜி-வன் (ஐசோபுரோத்தில் யோலேன்) 400 கிராம்/ லீற்றர். | 25 மி.லீஐ 10 லீ.நீரில் கலத்தல் | 40 மி.லீ. | 400 மி. லீ |
| பவஸ்ரின் (காபென்டசிம் 50%) | 07 கிராமை 10 லீ. நீரில் கரைக்கவும் | 11 கிராம் | 200 கிராம் |
| காபென்டசிம் 500 கிராம்/லீற்றர் | 07 மி. லீஐ 10 லீ நீரில் கலக்கவும். | 11 மி. லீ | 200 மி. லீ. |
| உடன் நோயைக் கட்டுப்படுத்தி உயர் விளைவு பெறுவோம். | | | |

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 8 விதி எண் : 9

### உடலமைப்பு

பிறந்த எண் 8 விதி எண் 9 ஆகக் கொண்டு பிறந்தவர்கள் சனி, செவ்வாய் இருவரின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவராவர். இவர்கள் நடுத்தர உயரமாக இருப்பர். கனத்த சரீரமுள்ளவர். இவர்கள் பற்கள் சற்று பெரியதாக இருக்கும். இவர்கள் கம்பீரத்துடன் தோற்றமளிப்பர். முகத்தில் தெளிவு இருக்கும்.

### மன, குணவியல்பு

இவர்கள் பொறுமைசாலிகள். அடக்கமானவர்கள் போல காணப்பட்டாலும் முன்கோபமும் முரட்டுத்தனமும் கொண்டவர். உடல் பலம் கொண்டவர்களாகவும் இருப்பர்.

எதிரிகள் எத்தனை பேர் வந்தாலும் அஞ்சமாட்டார்கள். எதிர்த்து வெற்றி கொள்ளும் ஆற்றல் பெற்றவர்களாக இருப்பர். ஆனால் தன்னை நம்பியவர்களுக்கு ஆதரவு அளிப்பர். அவர்களுக்கு தீங்கும் நினைக்க மாட்டார்கள்.

இவர்கள் தனிமையில் இருக்கும் போதும் நடந்து செல்லும் போதும் எதையாவது பேசிக்கொண்டே இருப்பர். இவர்கள் மனத்திலுள்ளதை மறைக்காது வெளியிடும் கள்ளம் கபட மற்றவர்களாக இருப்பர்.

இவர்களிடம் தயவு தாட்சண்யம் இருக்கும். பிறருக்கு உதவும் நல்ல மனப்பான்மை கொண்டவர்களாகவும் இருப்பர். பிறருக்கு எந்த சமயத்திலும் உதவத் தயாராக இருப்பர்.

இவர்கள் பிறருக்கு உதவுவதில் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் உயர்த்திக் கொள்வர். இவர்கள் எந்தப் பிரச்சினைகளாக இருந்தாலும் உடனுக்குடன் தீர்வு காண்பர்.

எந்த ஒரு செயலிலும் இவர்கள் முழு மூச்சுடன் இறங்கி வெற்றியுடன் முடிப்பர். இந்த உலகில் மனிதர்கள் இன்பங்களை அனுபவிக்கவே பிறந்துள்ளனர் என்பது இவர்களின் கொள்கை.

இவர்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்பர். தனக்கு அதிகமாகக் கஷ்டம் வரும்போது ஆண்டவனிடம் முறையிடுவர். இவர்கள் காம வேட்கை மிகுந்தவர்களாகவும் இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களின் ஆரம்ப வாழ்க்கை சோகமயமாக இருக்கும். இவர்களுக்கு குடும்ப வாழ்க்கை அமைந்தாலும் குடும்பத்தாருடன் ஒன்றி சுகபோகங்களை அனுபவிப்பவராக இருப்பது கடினம். அதனால் குடும்பத்தில் அதிகப் பற்று இல்லாதவரைப் போலவே இருப்பர்.

அத்துடன் இவருடைய முரட்டுக்குணம் குடும்பத்தாரின் அதிருப்தியைத் தேடித் தருவதாகவே இருக்கும். இவர்கள் தம் வீடு, அதிலுள்ள பொருட்கள், வண்டி வாகனம் போன்றவற்றை அழகாக வைத்துக் கொள்வர்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் இயற்கைக் காட்சிகளை இரசிப்பதிலும் வர்ணிப்பதிலும் வல்லவர்களாக இருப்பர்.

எதையும் திட்டமிட்டு புதிய முறை யில் செய்யக்கூடியவர்களாகவோ, வியாபாரிகளாகவோ இருக்கக்கூடும். பொறியியல், மருத்துவம், சட்டம், போதனை போன்ற துறைகளில் கூட ஈடுபாடு கொண்டிருக்கக் கூடும்.

இவர்கள் பிற்கால வாழ்க்கையில் பெருமளவு சம்பாதித்து சொத்து சேர்ப்பவராக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு இருதய சம்பந்த நோய், இரத்த அழுத்தம், மூட்டுவலி, முதுகுவலி போன்றன ஏற்படக்கூடும். இவர்களுக்கு பற்கள் பலமிருக்காது.

பல்வலியால் அடிக்கடி வருந்த நேரும். கண் தொடர்பிலான நோய்களும் ஏற்பட வாய்ப்பு உண்டு.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்களுக்கு புதன், சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற 5,6 அதுதொடர்பிலான யோகமுள்ள எண்களில் பெயர் அமைக்க நல்லது.

தம் நிறுவனங்களுக்கும் 5,6 அது தொடர்பிலான எண்களிலேயே பெயர் அமைக்க யோகமாகும்.

இவர்களுக்கு புதன், சுக்கிரன், செவ்வாய், சூரியன் ஆதிக்கம் பெற்ற 5,6,9,1 மற்றும் இவை தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமானவை.

ஆனால் சனி, கேது, சந்திரன் ஆதிக்கம் பெற்ற 8,7,2 இவை தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமற்றவை.

### பெயர் அமைக்க கவனிக்க வேண்டியவை

இதுவரை பிறந்த எண் 8 க்கு விதி எண் 1 முதல் 9 வரையிலான பலன்களைக் கண்டோம்.

பிறந்த எண்ணுக்கு விதி எண் நட்பாக இருக்குமானால் இதுவரை கூறப்பட்ட பலன்கள் நடக்கும். பகையாக இருக்குமானால் பலன்களிலும் நிச்சயமற்ற தன்மை காணப்படும்.

அந்த நிலையில் தான் இரண்டு எண்களுக்குப் பொருத்தமான யோகப்பலன் தரும் எண்களுக்கு அமைத்துக் கொள்வதால் நற்பலன்களைப் பெறக்கூடும்.

இரண்டு எண்களும் ஒன்றுக்கொன்று பகையாக இருக்கும் நிலையில் இவர்களுக்கு நல்ல பலனளிக்கும் எண்கள், திகதியையும் பாதக பலனளிக்கும் எண்கள், திகதியையும் வரையறுத்துக் கூறமுடியாத இக்கட்டான நிலை ஏற்படவும் கூடும்.

அந்த சந்தர்ப்பங்களில் அவர்களின் நடைமுறை வாழ்க்கையில் அதுவரை நடந்த நல்ல நிகழ்ச்சிகள், கெட்ட நிகழ்ச்சிகளைக் குறித்து அதில் நல்லது நடந்த எண்கள் (பாஸ் செய்த சர்டிபிகேட் எண், அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டர் எண், திருமண நாள் போன்றன) மற்றும் திகதியை நல்ல பலனளிக்க வல்லவை என்றும், அதைப் போன்று தீய நிகழ்ச்சி நடந்த எண்களும் திகதியும் யோக மற்றவை என்றும் நிச்சயிக்கலாம்.

இதுவரை கூறப்பட்ட மன, குணவியல்பு, குடும்ப வாழ்க்கை போன்றவற்றில் தீயதாக இருப்பின், பிறவி எண், விதி எண்ணுக்குப் பொருந்தும் பெயர் அமைத்துக் கொள்ள அதனால் ஏற்படும் கொடிய பலன் தவிர்க்கப்படும்.

ஒவ்வோர் எண்ணுக்குரியவருக்கும் கூறப்பட்டுள்ளவை அவர்களுக்குப் பொருந்தக் கூடிய தொழில்கள், அவர்களுக்கு பெயர் எண், பிறவி மற்றும் விதி எண்ணுக்குப் பொருத்தமாக யோகமுள்ளதாக இருப்பின் தொழிலில் முன்னேற்றமும், பொருளாதாரத்தில் செழிப்பும் பெறலாம்.

ஒரு சிலர் தமக்குப் பொருந்தாத தொழிலில் ஈடுபட்டிருப்பாரேயானால் அவர்கள் பொருந்தும் தொழிலுக்கு தம்மை திருப்பிக் கொண்டு முன்னேறலாம்.

ஆரோக்கியக்கேடு இயல்பாக ஏற்படக் கூடியதே. தம் பெயரை பொருத்தமுள்ளதாக அதிர்ஷ்டமாக அமைத்துக் கொண்டால், நோய் ஏற்பட்டால் அதனால் பெருமளவு பாதிப்பின்றித் தவிர்க்கப்படலாம்.

இனி பெயரை அமைத்துக் கொள்வதில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களை ஆராய்வோம்.

பிறந்த எண் 8 ஆகக் கொண்டவர்கள் சனியின் ஆதிக்கம் பெற்றவர்கள். இந்த எண் காரர்களுக்குக் கூட 8 என்ற எண் பொருந்தி வருவதில்லை.

விதி எண் எதுவாக இருந்தாலும் அவர்கள் 8 என்ற எண்ணை முற்றிலும் தவிர்த்து விடுவது நல்லது.

இவர்களுக்கு சுக்கிரனின் ஆதிக்கம் பெற்ற 6 எண் பொருந்தக்கூடியதாகவும் வாழ்க்கையில் முன்னேற்றம் அளிக்கக் கூடியதாகவும் இருக்கும். ஆனால் விதி எண் 3 ஆகக் கொண்டவர்கள் மட்டும் 6 ஐ விலக்குவது நல்லது.

அவர்கள் புதன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6 இல் பெயர் அமைத்துக் கொள்ள யோகமாக இருக்கும்.

விதி எண் 1,6 ஆகக் கொண்டவர்கள் சூரியன் ஆதிக்கத்திற்குண்டான ஆதார எண் 1 இல் 28 ஐத் தவிர்த்து வேறு யோகப் பலனளிக்கும் எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

விதி எண் 2,7 காரர்கள் செவ்வாயின் ஆதிக்கத்திற்குட்பட்ட 9 இலும் விதி எண் 4 காரர்கள் இராகுவின் ஆதிக்கத்திற்குட்பட்ட 4 இலும், விதி எண் 6 காரர்கள் குருவின் ஆதிக்கத்திற்குட்பட்ட 3 இலும், விதி எண் 9 காரர்கள் சந்திரன், கேது ஆதிக்கத்திற்குட்பட்ட 2,7 லும் பெயர் அமைத்துக் கொண்டால் சோதனை, வேதனை நிறைந்ததாக இருக்கும். இவர்கள் இந்த எண்களை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

8 எண் காரர்கள் தங்கள் விதி எண் எதுவாக இருந்தாலும் அவர்கள் புதனின் ஆதிக்கத்திற்குட்பட்ட 5 இல் யோகமான பலன் தரும் ஓர் எண்ணுக்குப் பெயர் அமைத்துக் கொள்வது சிறப்பானது. வாழ்க்கையில் பிரகாசமும் சந்தோஷமும் நிலவும். (தொடரும்)

## ஜனாதிபதித் தேர்தலில் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து கண்காணிக்கத் திட்டம்

இந்த ஜனாதிபதித் தேர்தலில் அரச சார்பற்ற நிறுவனங்கள் பணம் செலவழிக்கும் விதம் குறித்து கண்காணிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் சட்டவிரோதமான முறையில் நிதியைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் தொடர்பில் உன்னிப்பாக அவதானிக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல்களின்போது 25 அரச சார்பற்ற நிறுவனங்களில் பல அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்வாறு இயங்கிய நிறுவனங்களில் பத்து நிறுவனங்கள் ஏற்கனவே நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளைத தற்போது இரண்டு வெளிநாட்டு நிறுவனங்கள் தேர்தல் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (2-6)

## இந்தோனேசியாவில் இலங்கை அகதிகள் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இந்தோனேசியாவினுள் நுழைந்து சுற்றுலாப் பயணிகள் தங்கும் விடுதி ஒன்றில் தலைமறைவாக வசித்து வந்த 11 இலங்கையர்களை இந்தோனேசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் மலேசியாவில் இருந்து வேகப் படகில் இந்தோனேசியா வந்ததாக தெரிவித்துள்ளார்கள்.

கைது செய்யப்பட்டவர்களில் 7 ஆண்களும், 2 பெண்களும், 2 குழந்தைகளும் அடங்குவர் என்று இந்தோனேசியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவர்கள் அனைவரும் மலேசியாவில் சுமார் ஒருவருடகாலமாக தங்கியிருந்து விட்டு முகவர் ஒருவருக்கு 100 அமெரிக்க டொலர் கள் கொடுத்து வேகப் படகில் இந்தோ னேசியா வந்துள்ளார்கள் என்று விசாரணை களில் அறிய முடிகிறது என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் சிலரிடம் ஐ.நா. அகதிகள் நிறுவனம் வழங்கிய ஆவணங்கள் உள்ளதாகவும், 7 பேரிடம் ஐ.நா. அகதிகள் வழங்கிய கடிதங்கள் உள்ளன என்றும் இவர்கள் அனைவரும் இந்தோனேசிய குடிவரவு திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## அமைச்சர் மேர்வின் சில்வாவிற்று ஜனாதிபதி எச்சரிக்கை

(கொழும்பு)

தொழில் அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளதாக லங்காதீப பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அண்மையில் கிரிபத்கொட பகுதியில் வைத்து ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பி உறுப்பினர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் சட்டத்தை சரியான முறையில் அமுல்படுத்த நேரிடும் என ஜனாதிபதி அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

குறித்த தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் கலந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு கிரிபத்கொட பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்கள் தாக்குதல் நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதலில் சிலர் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## பயணிகள் உரிய நேரத்திற்குமுன் விமான நிலையம் செல்ல வேண்டும்

### ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

(கொழும்பு)

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்லும் பிரயாணிகள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய குடிவரவு கருமபீடங்களில் நிலவும் நெருக்கடி காரணமாக புறப்படும் நேரத்திலிருந்து குறைந்தது 4 மணித்தியாலங்கள் முன்னதாக விமான நிலையத்திற்கு சமூகமளிக்க வேண்டுமென ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அறிவித்துள்ளது.

விமான நிலைய குடிவரவு கருமபீடங்களில் நீண்ட வரிசைகளும் பல மணி நேர தாமதங்களும் இடம்பெறுவதால் பொதுவாக தள நடவடிக்கைகளைக் கையாளும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இந்த அறிவித்தலை விடுத்துள்ளதாக விமான நிலைய அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (2-6)

# வரலாறு காணாத அளவில் சீனாவில் பனி கொட்டுகிறது

(பீஜிங்)

சீனாவில் கடந்த 60 ஆண்டுகளில் இல்லாத அளவிற்குப் பனி கொட்டுகிறது. தலைநகர் பீஜிங்கில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 10 மில்லி மீற்றர் பனி பெய்தது. இது 1951ஆம் ஆண்டு முதல் இல்லாத அளவுக்கு அதிகமாகும்.

இதனால் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன. வீதிகளில் வாகனங்கள் ஊர்ந்து சென்றதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பீஜிங் நகரில் உள்ள விமான நிலையத்தில் ஓடு பாதைகளைப் பனிக்கட்டிகள் மூடிக்கொண்டு இருந்ததால் அதை அகற்றும் பணியில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் 1200இற்கும் மேற்பட்ட விமானங்கள் இரத்து செய்யப்பட்டதாகவும் சில தாமதமாகப் புறப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஹெய்பேய் மாநிலத்திலும், இன்னர் மங்கோலியா மாநிலத்திலும் பனிப்பொழிவு காரணமாக தட்பவெப்ப நிலை மைனஸ் 20 முதல் 32 டிகிரியாக இருந்தது. தென்கொரியாவிலும் கடந்த இரண்டு நாட்களாகத் தொடர்ந்து பனி பெய்து வருவதால் இயல்பு வாழ்க்கைப் பாதிக்கப்பட்டது. (2-6)

# ஆற்றில் கொட்டிய டீசலால் சீனாவில் மஞ்சள் நதியும் பாதிப்புள்ளாகும் நிலை

(பீஜிங்)

சீனாவில் எண்ணெய்க் குழாய்ப் பாதை உடைந்து ஆற்றில் சிந்திய டீசலினால் பரவி வரும் மாசு சீனாவின் மிக முக்கிய குடிநீர் ஆதாரமான மஞ்சள் நதியை எட்டிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெய் என்கிற ஒரு கிளையாற்றில் சிந்தியிருந்த டீசல் மற்ற இடங்களுக்குப் பரவாமல் தடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்றாலும் தற்போது மஞ்சள் நதியில் அமைந்துள்ள ஒரு அணைக்கட்டில் சோதிக்கப்பட்ட நீரில் எண்ணெய்ப் பிசிர் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என சீன அரச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது அப்பிராந்தியத்தில் உள்ள 3 மாகாணங்களைச் சேர்ந்த மக்களும் அங்குள்ள தொழிற்சாலைகளும் மஞ்சள் ஆற்றின் நீரை குடிக்கவோ பயன்படுத்தவோ வேண்டாம் என உள்ளூர் அதிகாரிகள் வலியுறுத்தி வருகின்றனர். எட்டு இலட்சத்துக்கும் அதிகமானோர் வாழ்ந்து வருகின்ற ஒரு பிராந்தியம் இது என்பது குறிப்பிடத்தக்கது.




# மூளையின் இரசாயன மாற்றங்களை அறிய புதிய உயிரியல் கலங்கள் கண்டுபிடிப்பு



(வோஷிங்டன்) மூளையின் இரசாயன மாற்றங்கள் தொடர்பில் நுணுக்கமான ஆய்வை மேற்கொள்ள உதவும் உயிரியல் கலங்களை அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

மேற்படி கலங்களானது குறிப்பிட்ட இரசாயனங்களுக்கு ஏற்ப நிறமாற்றம் அடையக் கூடியதாகும். இந்தக் கலங்கள் மனநலப் பிரச்சினைகளுக்காக வழங்கப்படும் மருந்துகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதைக் கண்டறிய உதவும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஏனைய மருந்துகளால் மூளையில் ஏற்படும் இரசாயனத் தாக்கங்கள் குறித்தும் அறிந்து கொள்வதற்கு இந்தப் புதிய உயிரியல் கலங்களே களம் அமைத்துத் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகள் நேச்சர் நியூரோசயன்ஸ் ஆய்வேட்டில் வெளியிடப்பட்டுள்ளன. (2-6)

# பனியில் உறையும் ஐரோப்பிய நாடுகள் குளிரில் விறைத்து 150 பேர் பலி

தற்போது குளிர்காலம் என்பதால் கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் உறைபனி கொட்டுகிறது. வீடுகள் மற்றும் வீதிகள் முழங்கால் அளவுக்குப் பனியால் மூடிக்கிடக்கிறது.

இதனால் போக்குவரத்து உட்பட பொது மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் வெளியே தலைகாட்ட முடியாமல் முடங்கிக்கிடக்கின்றனர்.

போலந்து நாட்டில் மைனஸ் 25 டிகிரிக்குத் தட்ப வெப்பநிலை மாறிவிட்டது. இதனால் புத்தாண்டு கொண்டாட்டத்தை மக்கள் ஜாலியாகக் கொண்டாட முடியவில்லை. அன்று மட்டும் 13 பேர் பலியானார்கள். அங்கு இதுவரை கடுமையான குளிர் மற்றும் உறைபனிக்கு 122 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் வீடுகளை இழந்து தவிக்கின்றனர்.

சுவிட்சர்லாந்தில் ஆல்ப்ஸ் மலையில் இருந்து பனிப்பாறைகள் அடிக்கடி உருண்டு கீழே விழுகின்றன. இதில் சிக்கி சுமார் பத்துப் பேர் வரை பலியாகியுள்ளனர்.

மேலும் மலையில் பனிச்சறுக்கு விளையாட்டுக்குச் செல்லும் பலரைக் காணவில்லை. அவர்கள் உறைபனியில் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது. எனவே அவர்களைத் தேடும் பணியில் எட்டு ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதற்கிடையே உறை பனிக்குள் புதைந்து பிணமாக கிடந்த மூன்று பேரின் உடல்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டன. அவர்களில் இரண்டு பேர் சுவிட்சர்லாந்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் ஜெர்மனியர். அவுஸ்திரேலியாவில் உள்ள மலைகளில் இருந்தும் பனிப்பாறைகள் உருண்டன.

இதில் சிக்கி ஜெர்மனியைச் சேர்ந்த இரண்டு பனிச்சறுக்கு வீரர்கள் உயிரிழந்துள்ளனர். அதுபோல பிரான்ஸ் மற்றும் இத்தாலியில் பனிப்பாறையில் சிக்கி மூன்று பனிச்சறுக்கு வீரர்கள் இறந்தனர்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் கடுமையாகப் பனி கொட்டுகிறது. இதனால் ரயில் மற்றும் பஸ் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. தெற்கு பிரான்சில் பல அதிவேக ரயில்கள் மிக காலதாமதமாகச் செல்கின்றன.

நேற்று முன்தினம் மட்டும் 13 விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன. இங்கிலாந்து உள்ளிட்ட மற்ற ஐரோப்பிய நாடுகளிலும் கடுமையான உறைபனியில் சிக்கித் தவிக்கின்றன. கடுமையான உறைபனி மற்றும் குளிருக்கு இதுவரை 150 பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர். (2-6)

# வளர்ந்து வருகின்றன பெண்களின் கால் பாதங்கள்


பெண்களின் கால் பாதங்கள் ஆண்டுக்கு ஆண்டு பெரிதாகி வருகின்றன. பெண்களின் பாத அளவு பெரிதாகியுள்ளதால் 9ஆம் இலக்க காலணிகள் விற்பனை 23 சதவீதம் அதிகரித்து உள்ளது.

6ஆம் இலக்க அளவு காலணிகள் விற்பனை 17 சதவீதமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பெண்கள் கொழுப்பு உள்ள உணவு வகைகளை அதிகம் உண்பதால் அவர்களின் உடலில் உள்ள ஹோர்மோன்கள் தூண்டப்பட்டு அதனால் பாதங்கள் பெரிதாக வளர்ந்து வருவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள். (2-6)

# டிரைவர் இல்லாமல் தானாக ஓடும் கார்கள் !

கார்களை ஓட்டுவதற்கு டிரைவர் இல்லாமல் நேவிகேஷன் சிஸ்டாம் மூலம் தானாக ஓடும் கார்கள் அடுத்த 10 ஆண்டுகளில் சாலைகளில் மலிந்து விடும். இத்தகைய கார்களை இங்கிலாந்து நாட்டை சேர்ந்த ரிகார்டோ கம்பெனி சோதனை முறையில் தயாரிக்க தொடங்கி உள்ளது. இந்த கார்கள் சாலைகளில் சோதனை முறையில் அடுத்த ஆண்டு தொடங்கும். சார்டேர (சேப் ரோட் ட்ரெயின்ஸ் பார் என்விரான்மென்ட்) என்று இந்த திட்டம் அழைக்கப்படுகிறது.



பிரதான சாலைகளில் 6 முதல் 8 கார்கள் சங்கிலி தொடர் போல செலுத்தப்படும். இந்த கார்களில் பயணம் செய்பவர்கள் புத்தகம் படித்துக்கொண்டோ கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டோ பயணம் செய்யலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# செலவு செய்யும் பழக்கத்துக்கு மரபணுவே காரணம்

(மெல்போர்ன்)

அதிகம் செலவு செய்யும் பழக்கத்துக்குக் காரணம் அவர்களது மரபணுதான் என ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துள்ளனர். குறைந்த வருவாய் இருந்தாலும் அதிகம் செலவு செய்யும் பழக்கம் உள்ளவர்கள் நிறையப் பேர் உள்ளனர். செலவைக் கட்டுப்படுத்த நினைத்தாலும் இவர்களால் முடிவதில்லை.

இது குறித்து லண்டன் பொருளாதாரப் பயிற்சி மையமும் கலிபோர்னியா பல்கலைக்கழகமும் இணைந்து 18 வயது முதல் 26 வயதுடைய இரண்டு ஆயிரத்து 500 ஆண், பெண்களிடம் ஆய்வு நடத்தின.

வங்கி இருப்பில் கணிசமான பணம் இருந்தாலும் அவ்வளவு பணத்தையும் செலவழிக்கும் இயல்புடைய இந்த இளைஞர்களிடம் சோதனை செய்ததில் அவர்களது மரபணுதான் இவர்களை செலவு செய்யத் தூண்டுகிறது என்ற விபரம் தெரிந்தது. எம்.ஏ.ஓ.ஏ. என்ற மரபணுதான் சம்பந்தப்பட்ட நபர் சிக்கனமாக இருக்கநினைத்தாலும் அவரை விடுவதில்லை என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-6)

# குறட்டையைக் கட்டுப்படுத்த வருகிறது புதிய கருவி

## பிரிட்டன் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

(லண்டன்)

குறட்டையைக் கட்டுப்படுத்த புதிய கருவி ஒன்றைப் பிரிட்டன் விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். தூங்கும்போது ஆண்கள் ஆனாலும் சரி பெண்கள் ஆனாலும் சரி ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அனைவருக்கும் குறட்டை வருவது வழக்கம்.

இந்தக் குறட்டை அவரவர் உடல் வாகுக்குத் தகுந்தபடி இருக்கும். உடல் பருமனானவர்களுக்குப் பொதுவாக குறட்டைச் சத்தம் அதிகமாக இருக்கும். ஒரு சிலர் விடும் குறட்டைச் சத்தத்தைப் பார்த்துவிட்டு வீட்டில் இருப்பவர்கள் தூங்க முடியாமல் வெளியில் செல்ல வேண்டிவரும். இந்த நிலையைப் போக்க பிரிட்டன் விஞ்ஞானிகள் புதிய கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். இது தற்கால விஞ்ஞானத்தில் ஒரு புரட்சி என்று கருதப்படுகிறது.

லண்டனைச் சேர்ந்த விஞ்ஞானிகள் தீப்பெட்டி போன்று ஒரு கருவியைக் கண்டு பிடித்துள்ளனர். இதைத் தூங்குபவர் மார்பில் பொருத்தும்போது இதன் செயற்பாடுகள் இதய தசைகளை இயங்கச் செய்கிறது. அப்போது இதயத்திலிருந்து வெளியேறும் காற்று எந்தத் தடையும் இன்றி வெளியேறுகிறது. இதனால் குறட்டை நின்றுபோகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனம் தற்போது பரிசோதனையில் இருந்து வருகிறது. விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. இதனால் தூக்கம் கெட்டுத் தவிக்கும் இலட்சோப இலட்ச மக்கள் பயன்பெறுவர் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (2-6)

# எச்.ஐ.வி. எயிட்ஸ் பாதிப்புக்குள்ளானவர்களுக்கான குடிவரவுத் தடையை அமெரிக்கா தளர்த்தியுள்ளது

எயிட்ஸ் நோய் வந்தவர்கள் எச்.ஐ.வி. கிருமித் தொற்றுக்குள்ளவர்கள் எவரும் அமெரிக் காவுக்குள் நுழைய கடந்த இருபது வருட காலமாக இருந்து வந்த குடிவரவுத் தடையை அமெரிக்க அரசாங்கம் விலக்கிக் கொண் டுள்ளது.

1980 களில் எயிட்ஸ் மற்றும் எச்.ஐ.வி. தொற்று உள்ளவர்களுக்கு அமெரிக்கா குடிவரவுத் தடை விதித்திருந்தது. எயிட்ஸ் நோய் உல கெங்கும் வேகமாகப் பரவுவதாக அச்சம் எழுந் திருந்த ஒரு காலகட்டம் அது.

சமூக ஆரோக்கியத்திற்கு ஆபத்தாக விளங்கிய தொழுநோய், காசநோய் போன்ற நோய்களின் பட்டியலில் எயிட்ஸையும் சேர்ப்பதென்பது மாதிரியான ஒரு முடிவாக அமெரிக்காவின் இந்த முடிவு அமைந் திருந் தது.

எச்.ஐ.வி. எயிட்ஸ் உள்ளவர்களை நாட்டுக் குள் அனுமதிக்க மறுக்கும் லிபியா, சவுதி அரேபியா உள்ளிட்ட 12 நாடுகளில் ஒன்றாக அமெரிக்காவும் நேற்று முன்தினம் வரை இருந்து வந்துள்ளது.

தற்போது எயிட்ஸுக்கு எதிரான போராட்டத் தில் உலகில் முக்கிய பங்காற்றும் ஒரு நாடாக விளங்க வேண்டும் என்ற அமெரிக்காவின் இலட்சியத்துடன் இந்தப் பயணத்தடை பொருந்திப் போவதாக இல்லை என அதிபர் பராக் ஒபாமா கூறியுள்ளதையடுத்தே இத் தடை நீக்கப்பட்டுள்ளது.

மேலும் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடந்து வருகின்ற எயிட்ஸ் ஒழிப்பு உலக மாநாடு வரும் 2012 ஆம் ஆண்டுக்கான முதல் தடவையாக அமெரிக்காவில் நடக்க வுள்ளது என்றும் குறிப்பிடத்தக்கது. (2-6)

# 2010 புத்தாண்டு பலன்கள்

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் முடிய)

நான்காம் மாதத்திற்கு மேல் நல்லநேரம்!

எதிர்ப்பைக் கண்டு அஞ்சாத குணமும், எதற்கும் கலங்காத மனமும் கொண்ட கடக ராசி நேயர்களே!

பொது நலத்தில் ஆர்வம் கொண்ட உங்களுக்கு இந்த புத்தாண்டு புதிய பொறுப்புகளையும், பொன்னான வாய்ப்புகளையும் வழங்கப்போகிறது.

மதிப்பும், மரியாதையும் உயர்ந்து மகத்தான வாழ்க்கையைக் காணப்போகிறீர்கள். துதிப்பாடித் திரிந்தவர்கள் உங்களை விட்டு விலகுவர். தோள் கொடுத்து உதவுபவர்கள் உங்களோடு இணைந்து செயல்படுவர்.

உங்கள் ராசிநாதன் சந்திரன் வளர்ந்து தேயும் கிரகம் என்பதால், ஏற்றமும் இறக்கமும் உங்கள் வாழ்க்கையில் இணைந்தே இருக்கும்.

மாற்றங்கள் வரும் பொழுதெல்லாம் அதை உபயோகப்படுத்திக் கொள்வீர்கள். கூட்டு முயற்சி உங்களுக்கு பிடிக்காது. கொள்கைப் பிடிப்பை அடிக்கடி தளர்த்திக் கொள்வீர்கள். ஒரு காரியத்தை முடிக்க வேண்டுமென்றால் அதை எப்படியாவது, யாரைப் பிடித்தாவது முடித்து விடுவீர்கள்.

இந்த வருடத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் குரு சஞ்சரித்தாலும், நலம் தரும் பார்வையை உங்கள் ராசியில் செலுத்துகிறது. எனவே, மே மாதம் முதல் மேதினி போற்றும் வாழ்க்கை உங்களுக்கு அமையப் போகிறது. பணக் கவலையும் இருக்காது; மனக் கவலையும் இருக்காது.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அவை இணைந்து செயல்பட்டால், துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல் பணிந்து வணங்கி பரிகாரங்களைச் செய்து யோக பலம் பெற்றநாளில் ஸ்தலங்களுக்கும் சென்று வந்தால் எதிர்பார்ப்புகள் நிறை வேறும். எடுத்த காரியங்களும் எளிதில் வெற்றி பெறும்.

பெயரியல் முறையில், எண்கணித அடிப்படையில், சந்திரன் சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்ச நிலை பார்த்து, அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால், எதிர்காலம் இனிமையாக அமையும். குருவிற்கு உரிய ஆண்டாகக் கருதப்படும் இந்த 2010 இல், குருவின் பார்வை உங்கள் ராசிக்கு எந்தெந்த இடங்களில் எல்லாம் பதிகிறதோ, அந்தந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்கள் வந்து சேரும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

### 1-1-2010 முதல் 30-4-2010 வரை.

இக்காலம் உங்களுக்கு எதையும் செய்ய வேண்டிய காலமாகும். பொற்காலமாக மாற வேண்டுமானால் போதிய அளவில் வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டும். செவ்வாய் நீசம் பெறும் இந்த நேரத்தில் பிள்ளைகள் வழியில் செலவுகள் அதிகரிக்கலாம். பெற்றோர் வழியிலும் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும்.

அன்பு காட்டுவதன் மூலமும், ஆதரித்துப் பேசுவதன் மூலமும் தான் அகிலத்தில் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க இயலும்.

சனியும் இக்காலம் வக்ரம் பெறுகிறார். எட்டுக்கு அதிபதி வக்ரம் பெறுவது ஒரு வழிக்கு யோகம் தான் என்றாலும், ஏழுக்கும் அதிபதியாக அல்லவா சனி விளங்குகிறார். எனவே வாழ்க்கதைத் துணை வழியே அனுச்ரித்துச் செல்வது நல்லது.

"விட்டுக் கொடுத்துச் செல்பவர்கள் கெட்டுப்போவதில்லை" என்ற பழமொழியை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். குடும்பச்சுமை கூடும். ஒவ்வொரு குடும்ப உறுப்பினர்களுக்கும் எது தேவையோ அதைச் செய்து திருப்தியடையச் செய்வது நல்லது.

விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துங்கள். இழப்புகள் ஏற்படாதிருக்க ஏதேனும் ஒரு வழியில் செலவிட வேண்டும்.

எனவே அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கி மகிழ உகந்த நேரமிது.

குருவின் பார்வை பதியும் இடங்கள் எல்லாம் புனிதமடைகின்றன என்பதால் சுகஸ்தானமும், விரய ஸ்தானமும் பலம் பெறுவதால் சுகபோகச் செலவுகள், பயணங்கள், கடல் தாண்டும் வாய்ப்புகள் போன்றவைகள் வந்து சேரலாம்.

தாயின் அரவணைப்பும், தந்தை வழி அரவணைப்பும் திடீரென வந்து திக்குமுக்காட வைக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

பொதுவாழ்வில் புதிய பொறுப்புகள் வந்து சேரும். தலைமைக்குத் தகுதியானவர்கள் என்பதை நிரூபித்துக் காட்டுவீர்கள். அஷ்டமத்துக் குருவால் ஆரோக்கியப் பாதிப்புகள் ஏற்படாமல் இருக்கவும், அமைதி கிடைக்கவும் குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வது நல்லது.

### 1-5-2010 முதல் 31-8-2010 வரை

இக்காலம் எதிரிகள் விலகும் காலமாகும். இதுவரை மறைமுக எதிரியாக இருந்து நீங்கள் செய்யும் மகத்தான காரியங்களுக்கெல்லாம் தீங்கு செய்தவர்கள் இப்பொழுது விலகிச் செல்வர்.

கடன் சுமை குறையும். தொழில், உத்தியோகத்தில் எதிர்பார்த்த நற்பலன்கள் வந்து சேரும். ஒன்பதுக்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால் பாகப்பிரிவினைகள் இழுபறி நிலையில் இருக்கும்.

பங்காளிப் பகைகளை வளர்த்துக் கொள்ளாமல் பார்த்துக் கொள்வது நல்லது. தந்தை வழி சொத்துக்களை விற்று விட்டு தாமாகவே சொத்துக்களை வாங்கும் சூழ்நிலை உருவாகும்.

நட்பு வட்டம் விரியும். பதவி மாற்றங்களும், இலாகா மாற்றங்களும் ஒரு சிலருக்கு வந்து சேரலாம். வரும் மாற்றங்களை உபயோகப்புடுத்திக் கொள்வது நல்லது. சான்றோர்களின் ஆலோசனை தக்க சமயத்தில் கைகொடுக்கும் என்பதால், ஈன்ற பெற்றோர்களிடமும், சான்றோர்களிடமும் எதைச் செய்தாலும் ஆலோசனை கேட்டுச் செய்வது வெற்றி வாய்ப்பை வழங்கும்.

மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் ராசியிலும், 3, 5 ஆகிய இடங்களிலும் பதியப்போகிறது. எனவே, கடந்த காலத்தில் ஏற்பட்ட கவலைகள் மாறும். உடல் ஆரோக்கியத்திற்காக செலவிட்ட தொகை இனி குறையும். குடும்பத்தினர்கள் உங்களின் குணமறிந்து நடந்து கொள்வர். பயணங்களால் பலன் கிடைக்கும்.

குருவின் பார்வை மூன்றாம் இடத்தில் பதிவதால், விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். வியாபார முன்னேற்றத்திற்கு அவர்கள் பணம் கொடுத்துதவ முன்வருவர்.

கௌரவம், அந்தஸ்து உயரும். பாகப்பிரிவினைகளுக்கு இதுவரை ஒத்துவராத உடன்பிறப்புகள் இப்பொழுது ஒத்து வருவது கண்டு ஆச்சரியப்படுவீர்கள்.

பிள்ளைகளின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். மாமன், மைத்துனர்கள் வழியில் மகத்தான ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்ப ஒற்றுமை கூடும். கூடுதல் இலாபம் பெற வழி என்ன என்று யோசிப்பீர்கள்.

கடந்த காலத்தைக் காட்டிலும் இந்த புத்தாண்டு கைநிறைய பொருள்வளம் தரப் போகிறது என்பதை மே மாதம் பிறந்த சில தினங்களிலேயே தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்.

### 1-9-2010 முதல் 31-12-2009 வரை

இக்காலத்தில் குரு வக்ரமாக இருந்தாலும் கூட, சனி வக்ர நிவர்த்தியாகி பலம் பெறுகிறார். எனவே நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு ஒரு சிலருக்கு உருவாகும். நிம்மதிக்காக யாத்திரைகளையும் மேற்கொள்வீர்கள்.

சப்தமாதிபதி சனி வக்ர நிவர்த்தியானதால் சஞ்சலங்கள் தீரும். தக்க விதத்தில் குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மக்கட் செல்வாக்கை அதிகம் பெற்ற நீங்கள் பொது வாழ்வில் புதிய திருப்பங்களைக் காண்பீர்கள். செவ்வாய், சனி சேர்க்கைக் காலத்தில் விழிப்புணர்ச்சி தேவை.

செப்டம்பர் கடைசியில் செவ்வாயும், சுக்ரனும் இணைந்து சஞ்சரிக்கிறார்கள். அக்டோபர் மாதத்தில் சூரியனும், புதனும், சுக்ரனும் இணைந்து துலாம் ராசியில் சஞ்சரிக்கிறார்கள்.

இங்ஙனம் கூட்டு கிரக யோகம் செயல்படும் நேரத்தில் கூட்டாளிகளால் நன்மை கிடைக்கும். கொள்கைப் பிடிப்போடு செயல்பட இயலும். வாட்டங்கள் போக்கி வளர்ச்சியைக் கூட்ட குல தெய்வ வழிபாட்டை நீங்கள் மேற்கொள்வது நல்லது.

குன்றாக் குடியாக உங்கள் குடி உயர, குடும்பம் தழைக்க ஆறுமுக சுவாமியை வழிபட்டு வாருங்கள். வள்ளி மணாளன் வழிபாடு உங்கள் வாழ்க்கையை வளப்படுத்தும்.

கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு

### சிவல்புரி சிங்காரம்

ஆண்டின் தொடக்கத்தில் குடும்பச் சுமை கூடும். சொத்து வாங்கும் முயற்சியில் தாமதம் ஏற்படலாம்.

மே மாதத்திற்கு மேல் ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். அடுத்தவர் நலன் கருதி வாங்கிக் கொடுத்த தொகையும் வந்து சேரும். வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் விரதமிருந்து வழிபாடுகளைச் செய்தால் வியக்கும் வாழ்க்கை அமையும்.

சுய ஜாதகத்தில் ராகு – கேதுக்கள் இருக்கும் நிலையறிந்து யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகளைச் செய்தால் ஏற்ற, இறக்கமில்லாத வாழ்க்கை அமையும்.

(தொடரும்)

# வெலிக்கடைச் சிறையில் தமிழ் கைதிகள் மீது தாக்குதல்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள வெலிக்கடைச் சிறையில் உள்ள தமிழ் கைதிகள் மீது சிங்களக் கைதிகள் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிக்கடைச் சிறையில் நடைபெற்ற மோதல் சம்பவம் ஒன்றிலேயே இரண்டு தமிழ் கைதிகள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப்புலிகள் எனச் சந்தேகிக்கப்படும் நபர்கள் மீதே வேறு ஒரு குழுவினர் தாக்குதலை நடாத்தியதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தற்போது வெலிக்கடைச் சிறை யில் 200 இற்கும் மேற்பட்ட விடுதலைப் புலிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (2-6)

# அரச வாசஸ்தலத்தில் இருந்து சரத்பொன்சேகா வெளியேறினார்

(கொழும்பு)

உயர்நீதிமன்ற உத்தரவின்படி எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா, தமது உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியேறினார்.

எனினும் அது தொடர்பில் அவர் சட்டமா அதிபருக்கு அறிவிக்கவில்லை என இராணுவத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில் அவர் உத்தியோகபூர்வமாக தமது வாசஸ்தலத்தில் இருந்து வெளியேறியமைக்கான அறிவித்தலை குறித்த தரப்புகளுக்கு அறிவித்த பின்னரே அது தொடர்பாக ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படும் என இராணுவ தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை இந்த வாசஸ்தலத்தில் இருந்து ஜெனரல் பொன்சேகா வெளியேறியுள்ள நிலையில் அதில் தற்போதைய இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரிய குடியேறவுள்ளார். (ந-5)

# ஜனாதிபதி தேர்தல் வன்முறைகள் இணையத்தில் வெளியிடப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகளினால் மேற்கொள்ளப்படும் வன்முறை சம்பவங்களை இணையத்தில் வெளியிட தேர்தல் வன்முறைகளுக்கான கண்காணிப்பு மையம் திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

http://cmev.wordpress.com என்ற இணையத்தளத்தின் ஊடாக வன்முறை சம்பவங்களை அது நடைபெற்ற பகுதிகளின் வரைபடங்களுடன் அறிந்து கொள்ளலாம். மாற்றுக் கொள்கைகளுக்கான அமைப்பின் உதவியுடன் (http://bit.ly/cmevmonitoring) இந்த திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறை இடம்பெற்ற பகுதிகளின் வரைபடங்களுடன் தேர்தல் கண்காணிப்பாளர்களின் நடவடிக்கை தொடர்பான புகைப்படங்கள் மற்றும் காணொளி ஆகியவற்றையும் மக்கள் பார்க்கும் வசதிகளும் ஏற்படுத்தப்படவுள்ளது.

தேர்தல் வன்முறைகளுக்கான கண்காணிப்பு மையம் 1997 ஆம் ஆண்டு மாற்றுக் கொள்கைக்கான அமைப்பு மற்றும் சுதந்திர ஊடக அமைப்பு ஆகியவற்றால் உருவாக்கப்பட்டது. தேர்தல் தொடர்பான வன்முறைகளை சுயாதீனமாக கண்காணிக்கும் அமைப்பாக இது செயற்பட்டு வருகின்றது. (ந-5)

# வவுனியாவின் சனத்தொகை நான்கு மடங்காக உயர்வு

(கொழும்பு)

வவுனியாவின் சனத்தொகை 4 மடங்காக உயர்வடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் வவுனியாவில் தங்கியிருப்பதனால் இவ்வாறு சனத்தொகை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், சனத்தொகை அதிகரிப்புக்கு ஏற்றவகையில் போக்குவரத்து வசதிகள் மாற்றம் செய்யப்படவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர் என திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (2-6)

நாம் நேசிக்கும் ஒருவருக்கு மரணம் நேரிடும் பொழுதுதான் நாம் மரணத்தை முதன் முதலாக உணர ஆரம்பிக்கின்றோம்.

–ஸ்டேல்

வலம்புரி

# போர்க்கால அடிப்படையில் டெங்கை கட்டுப்படுத்த வேண்டும்

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோயின் தாக்கம் மிக வேகமெடுத்துள்ளது. டெங்கின் தாக்கத்தால் நேற்றுவரை யாழ்.மாவட்டத்தில் பதினொரு பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இதனை விட ஆயிரத்தை நெருங்கும் அளவில் டெங்குக் காய்ச்சல் நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துச் செல்லுமாயின், யாழ். போதனா வைத்தியசாலையில் நோயாளர்கள் நிரம்பி வழியும் பரிதாபநிலை ஏற்படும்.

யாழ்.குடாநாட்டில் டெங்கு நோய் வேகம் எடுத்தும் அரசு இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் மூழ்கிப் போயிருக்கும் அரசியல்வாதிகள் யாழ்.மாவட்டத்தில் வேகமாகப் பரவும் டெங்கு பற்றி அறிவதற்கு வாய்ப்பில்லை.

எனவே அவர்கள் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் எந்தக் கோரிக்கையையும் முன்வைக்க மாட்டார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிபை இதுவரை எடுக்க முடியாதவர்கள் டெங்கு பற்றிச் சிந்திப்பதற்கு சில வருடங்கள் எடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இடம் இல்லை.

எல்லாம் நாம் விட்ட தவறு. பொருத்தமானவர்களை நாடாளுமன்றத்திற்கு அனுப்பாததால் ஏற்பட்ட விளைவை அனுபவிக்கின்றோம்.

இந்த அனுபவிப்புக்களில் இருந்து மக்கள் திருந்தாதவரை துன்பம் தொடரவே செய்யும். இனிமேலாவது நாம் சிந்தித்துச் செயற்படுவோம் என்ற முடிபை ஒவ்வொருவரும் எடுக்கும் அதேவேளை, டெங்கு நோயின் பரவலைக் கட்டுப்படுத்துவதில் பொதுமக்களும் சுகாதார அமைப்புகளும் போர்க்கால நடவடிக்கைப் பிரகடனமாக டெங்கு ஒழிப்பில் ஈடுபட வேண்டும்.

பாடசாலை மட்டத்தில் டெங்கு நோய் பற்றிய விழிப்புணர்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும் கழிவுகளை, குப்பை கூழங்களை அகற்றுவதில் உள்ளூராட்சி சபைகள் தீவிரமாகச் செயற்பட வேண்டும்.

அதேநேரம் யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அரச அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என அனைத்தும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசை வலியுறுத்த வேண்டும்.

இவையாவற்றுக்கும் மேலாக யாழ்.மாவட்டத்தில் இயங்கும் தனியார் வைத்தியசாலைகள் டெங்கு நோய்க் கட்டுப்பாட்டில் கூடிய பங்காற்றுவது காலத்தின் அவசிய தேவையாகும்.

# இலங்கையின் தனிநபர் வருமானத்தை 6 ஆயிரம் டொலர்களாக அதிகரிப்பேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த நான்கு வருட காலத்தில் இலங்கையரின் தனிநபர் வருமானத்தை 2 ஆயிரத்து 200 டொலர்கள் வரை அதிகரிக்கச் செய்துள்ளேன். இவ்வருமானத்தை 6 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை அதிகரிக்கச் செய்வதே எனது இலக்கு என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் கடமையாற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களுடனான சந்திப்பு அலரிமாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மருத்துவ மாதுக்கள் இந்த நாட்டுக்கு சிறந்த சேவை செய்து வருகின்றார்கள். அவர்கள் வீடு வீடாகச் சென்று தங்களது சேவையை மக்களுக்கு வழங்கி வருகின்றார்கள். இவர்களது சேவையின் பயனாக இந் நாட்டில் தாய், சேய் மரணம் பெரிதும் குறைந்துள்ளது. இதனையிட்டு அவர்களை நான் கௌரவப்படுத்துகின்றேன்.

நான் 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாகப் பதவியேற்கும் வரையும் இந்நாட்டின் தனிநபர் வருமானம் ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கும் குறைவாகவே இருந்தது.

நாம் நாட்டு மக்களுக்கு வளமான சுபீட்ச வாழ்க்கையையும் பெற்றுக் கொடுக்கவே நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதனை எனது கடமையாகவும் பொறுப்பாகவும் கருதுகிறேன். மேலும் நாட்டில் அபிவிருத்தி இல்லாமல் சமாதானம் இல்லை. சமாதானம் இன்றி அபிவிருத்தியும் இல்லை. இதனை நாம் தெளிவாக உணர்ந்திருக்கிறோம். இதனைக் கருத்தில் கொண்டு தான் பயங்கரவாதத்தை ஒழிக்கும் நடவடிக்கையையும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களையும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கின்றோம் என்றார். (2-6)

# ஆய்வுகளின் அடிப்படையில் சரத் பொன்சேகா முன்னிலை வகிப்பதாக ஐ.தே.க. தகவல்.

(கொழும்பு)

ஆய்வுகளின் அடிப்படையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜெனரல் சரத் பொன்சேகா முன்னணி வகிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான சிறிகொத்தாவிலில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் வரலாற்றில் மிகவும் மோசமான தேர்தலாக இதனை வர்ணிக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல் காரியாலயம் ஒன்றையோ அல்லது பதாதை ஒன்றையோ பேண முடியாத நெருக்கடியான நிலை உருவாகியுள்ளதெனவும் அரசாங்க ஊடகங்களுக்கு மட்டுமன்றி தனியார் ஊடகங்களுக்கும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் அரசாங்க அதிகாரிகள் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

## வவுனியா, திருகோணமலைக்கான புதிய பஸ் சேவைகள்

(கொழும்பு)

பருத்தித்துறையிலிருந்து கொடிகாமம் வழியாக திருகோணமலை, வவுனியா ஆகிய இடங்களுக்கான புதிய பஸ் சேவைகள் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பருத்தித்துறையில் இருந்து கொடிகாமமூடாக வவுனியா செல்லவுள்ள முதலாவது சேவை காலை 5.30 மணிக்கு ஆரம்பமாகும் என்றும், திருகோணமலைக்கான பஸ்சேவை காலை 6 மணிக்கும் வவுனியாவுக்கான அடுத்த பேரூந்து காலை 6.30 மணிக்கு புறப்படும் எனவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை முகாமையாளர் தெரிவித்துள்ளார். (2)

## இந்திய இறையாண்மைக்கு எதிரான பேச்சு வை.கோ. மீதான வழக்கு இன்று ஆரம்பம்.

(சென்னை)



சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் ஈழத்தில் நடப்பது என்ன என்ற தலைப்பில் கருத்தரங்கு நடந்தது. இதில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கண்ணப்பன் ஆகியோர் கலந்துகொண்டு பேசினர்.

அப்போது இந்திய இறையாண்மைக்கு எதிரான கருத்துக்களைத் தெரிவித்ததாக வை.கோ., கண்ணப்பன் ஆகியோர் மீது பொலிசார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதைத் தொடர்ந்து அவர்கள் 2 பேரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது ஜார்ஜ்டவுன் நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. இந்த நிலையில் கடந்த 2 ஆம் திகதி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.


அன்று வை.கோ. நீதிமன்றத்தில் முந்நிலையானார். குற்றப்பத்திரிகை நகல் அவரிடம் வழங்கப்பட்டது. பின்னர் இந்த வழக்கு விசாரணை சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள முதன்மை செசன்சு நீதிமன்றுக்கு மாற்றப்பட்டது.

வழக்கு விசாரணை இன்று நீதிபதி தேவராஜ் முன்னிலையில் தொடங்குகிறது. இதில் வை.கோ. நேரில் ஆஜராகிறார். மேலும் தனக்காகத்தானே வாதாடுகிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (6)

## ஜனாதிபதித் தேர்தலில் முனைப்பு காட்டாதவர்களுக்கு பொதுத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பமில்லை

### – ரணில் விக்கிரமசிங்க –

(கொழும்பு)



எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உரிய முனைப்பு காட்டத் தவறும் தொகுதி அமைப்பாளர்களுக்கு பொதுத் தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் வெற்றிக்காக சகல ஐக்கிய தேசியக் கட்சி தொகுதி அமைப்பாளர்களும் கடுமையாகப் பாடுபட வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

இதேவேளை, குறைந்தபட்சம் மூன்று தடவைகள் ஒரு பிரதேசத்திற்கு விஜயம் செய்வதன் மூலம் பிரச்சாரத்தை முன்னெடுக்க வேண்டுமென கட்சித் தலைமை கோரியுள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உப தலைவர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

உரிய அடையாள அட்டை இல்லாத வாக்காளர்களுக்கு அடையாள.அட்டைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தொகுதி அமைப்பாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (6)


## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதால் அதிபர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.எஸ். மாணிக்கராஜா அறிவித்துள்ளார். (6-4)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## கல்வியும் சமுதாயமும்




அன்பு, நேர்மை, பொறுமை ஆகியவற்றைத் தவிர வேறொன்றுமே நமக்குத் தேவையில்லை. வளர்ச்சியடைவதுதான் வாழ்க்கை, அதாவது விரிவடைதல் அது தான் அன்பாகும். எனவே அன்புதான் வாழ்க்கை ஆகும். அன்பு ஒன்றுதான் வாழ்க்கையின் ஒரே நியதியாகும்.

எல்லாவிதமான சுயநலமும் மரணம்தான். இந்த உண்மை இம்மை மறுமையாகிய இரண்டு உலகங்களுக்கும் பொருந்தும். நன்மை செய்து கொண்டிருப்பது தான் வாழ்க்கை. மற்றவர்களுக்கு நன்மை செய்யாமலிருப்பது தான் மரணம். இப்போது நாம் பார்க்கிற மக்களில் தொண்ணூறு சதவீதம் இறந்து போனவர்கள். அவர்கள் பிசாசுகள் தாம். எனது அருமைக் குழந்தைகளே, அன்பு செலுத்துபவர்களைத் தவிர வேறு யாரையும் வாழ்வதாகக் கருத முடியாது.

# சூரியனை அருகில் சென்று ஆராய நவீன தொலைநோக்கி

## நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஜோன் மேத்தர் அறிவிப்பு




(திருவனந்தபுரம்)

97ஆவது இந்திய அறிவியல் மாநாடு கேரள மாநிலம் திருவனந் தபுரத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. இந்த மாநாட்டில் ஏராளமான அறிவியல் மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானிகள், அறிவி யல் நிபுணர்கள் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி வருகிறார்கள்.

இக் கருத்தரங்கில் நோபல் பரிசு பெற்ற விஞ்ஞானி ஜோன் மேத்தர் பேசினார். அவர் கூறியதாவது,

விண்வெளியில் இதுவரை நாம் கண்டு பிடித்தது ஒரு சிறிய அளவு தான். கண்டு பிடிக்காதவை இன்னும் வானளாவியது. அதைப் போல ஒவ்வொரு கோள் களைப் பற்றியும் ஓரளவுதான் நாம் தெரிந்து அறிந்து கொள்ள முடிகிறது.

குறிப்பாக சூரியன் எவ்வாறு ஒளியை தரு கிறது? சொல்ல முடியாத அளவுக்கு அனல் கக் கும் வெப்பத்தை எப்படி தருகிறது?




என்பதற்கான காரணத்தை அடிப்படையாக மட்டுமே கண்டு பிடித்துள்ளோம் அதைப் போல சூரியனில் உள்ள முழு மூலப் பொருட் களையும் முழு அமைப் புகளையும் முழு இயக்கத்தையும் முழுமையாக எம்மால் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்கு கார ணம் அதனுடைய வெப்பம்தான். எனவே வெப்பத்தை தாங்கக் கூடியதிறன் கொண்ட சக்தி கொண்ட நவீன தொலை நோக்கியை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வரு கிறோம்.

அந்த தொலைநோக்கியின் மூலம் ரொக்கெட்டில் சூரியனின் அருகில் சென்று சூரியன் பற்றி ஆராய்ச்சி செய்ய முடிவு செய் யப்பட்டுள்ளது.

இந்த தொலைநோக்கி 2014 ஆம் ஆண்டு ஐரோப்பிய நாடுகளில் கூட்டமைப் புக்கு சொந்தமான ரொக்கெட்டில் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.(2-6)

# சொந்தமாக ரயில் நிலையம் கட்டிய கிராமத்து மக்கள்

## அரியானாவில் புதுமை

(குர்கான்)

அரியானா மாநிலம் குர்கான் அருகே தாஜ்நகர் என்ற கிராமம் உள்ளது. சுமார் 3 ஆயிரம் பேர் வசிக்கும் இந்த கிராமம் அரு கில் ரயில் பாதை செல்கிறது. தாஜ்நகர் மக் களை ஏற்றிச் செல்ல உள்ளூர் ரயில்கள் அங்கு நின்று செல்லும்.

ஆனால் அங்கு ரயில் நிலையம் எதுவும் இல்லை. தாஜ்நகர் மக்கள் பல ஆண்டு களாக கேட்டும் ரயில்வே நிர்வாகம் அதை கண்டு கொள்ளவில்லை.

இதையடுத்து தங்கள் சொந்த பணத்தில் இருந்து ரயில் நிலையம் கட்ட தாஜ்நகர் கிராம மக்கள் முடிபு செய்தனர். இதற்காக 11 பேர் கொண்ட குழு உருவாக்கப்பட்டது. அவர்கள் வசூலில் ஈடுபட்டனர்.


கிராம மக்கள் ஒவ்வொருவரும் ஆர்வத்து டன் தங்களால் முடிந்ததை கொடுத்தனர். இதன் மூலம் 21 இலட்சம் ரூபாய் திரட்டப்பட் டது. அதை வைத்து அழகான ரயில் நிலை யம் ஒன்றை கட்டிவிட்டனர்.

இந்தியாவில் ரயில்வே நிர்வாகம் ஒரு ரூபா கூட செலவழிக்காமல் பொதுமக்களே கட்டிய முதல் ரயில் நிலையம் இதுதான் என் பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2 ஆண்டுகளாக பணம் வசூலித்து இந்த ரயில் நிலையத்தை கிராம மக்கள் கட்டி முடித்துள்ளனர். (2-6)

# நுளம்பை ஒழித்துக் கட்ட புதிய இரசாயன பொருள் கண்டுபிடிப்பு

நுளம்பால் மலேரியா, சிக்குன் குனியா உள்ளிட்ட பல நோய்கள் பரவி வருகின்றன.



நுளம்பை ஒழிக்க ஏராளமான முறைகள் கையாளப்படுகின்ற போதும் அதனை முற் றிலும் ஒழிக்க முடியவில்லை.

இதனால் குவாலியர் நகரில் உள்ள இரா ணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையம் பெண் நுளம்பை வசீகரிக்கும் *பெரோமோன்* என்ற ஹோர்மோனின் இரசாயன பொருளை கண்டு பிடித்துள்ளது.

நீர்நிலைகளில் லார்வா வெளியிடும் பெரா மோன் ஹோர்மோன் வாசனையால் கவரப் படும் பெண் நுளம்புகள் அங்கு ஏராளமான முட்டைகள் இடுகின்றன.

இதைத் தெரிந்து கொண்ட இராணுவ ஆராய்ச்சி மைய விஞ்ஞானிகள் பெரோ மோன் ஹோர்மோன் இரசாயன மூலக்கூறு அடங் கிய திரவத்தை தயாரித்துள்ளனர். இதை ஒரு நீர் நிலையில் தெளிக்கும் போது அந்த இடத் தில் பெண் நுளம்புகள் படையெடுக்கும். ஆயி ரக் கணக்கில் முட்டைகளை இடும் அந்த சம யம் பார்த்து பூச்சிகொல்லிமருந்துகளை தெளித் தால் ஒரே இடத்தில் நுளம்புகளை அழித்து விடமுடியும் என கண்டறிந்துள்ளனர்.

இந்தத் தொழில் நுட்பம் நான்கு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டு மருந்து தயாரிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமி ழகம் மற்றும் கேரளாவில் சோதனை ரீதியாக இந்த பூச்சி மருந்து பயன்படுத்தப்பட்டு திருப்தி அளித்துள்ளதால் மற்ற மாநிலங்களி லும் இந்த மருந்தை பயன்படுத்தும் படி மத் திய அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

இதே வேளை இந்த தொழில் நுட்பத்தை அமெரிக்காவும் பயன்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளது. (2-6)

# இந்திய வடமாநிலங்கள் கடும் பனிப்பொழிவால் பாதிப்பு

## குளிருக்கு 120 பேர் பலி

(புதுடில்லி)

இந்தியாவின் வட மாநிலங்களில் குளிர் வாட்டி எடுக்கிறது. காஷ்மீர் , இமாச்சலபிரதேச ஆகிய மாநிலங்களில் குளிர் காற்றுடன் கடுமையான பனிப்பொழிவும் காணப்படுகிறது.

ஜம்மு-ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில் குவாசிகண்ட்டுக்கும் பனிகால் என்ற இடத்துக் கும் இடையே சாலை முழுவதும் பனிப்பொழி வால் மூடப்பட்டு இருப்பதால் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் காஷ்மீர் மாநிலம் நாட்டின் பிற பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளது. பனி மூட்டத்தின் காரணமாக ஸ்ரீநகர் சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் காலையில் விமானங்கள் வந்து செல்வ தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது.

இதேவேளை இக் குளிருக்கு உத்தரபிர தேசத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 40 பேரும் பீகாரில் நேற்று முன்தினம் 8 பேரும் அரியானாவில் 2 பேரும் பலியானார்கள். இதைத் தொடர்ந்து வட மாநிலங்களில் குளிருக்கு பலியானவர்களின் எண் ணிக்கை 120 ஆக உயர்ந்து உத்தர பிரதே சத்தில் மட்டும் குளிருக்கு இதுவரை 110 பேர் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# அனுபவ எழுத்துகளே சாகாவரம் பெறும் தமிழருவி மணியன்



(சென்னை)

அனுபவத்தின் அடிப்படையில் எழுதும் எழுத்துக்களே சாகாவரம் பெறும் என எழுத்தாளர் தமிழருவி மணியன் கூறியுள் ளார்.

சென்னையில் நடைபெறும் 33ஆவது புத்தகக் காட்சியில் கடந்த திங்கட்கிழமை அவர் பேசியதாவது,

சங்க காலத்தில் கபிலர் உள்ளிட்டோர் தாம் அறிந்தவற்றை அனுபவித்தவற்றை மட்டுமே எழுதினார். அவர்கள் தமது அனு வபம் சார்ந்து எழுதியதால் அந்த எழுத்துக் கள் சாகாவரம் பெற்றன என்பதற்கு சங்க இலக்கியமே சான்றாக உள்ளன. நிறைய புத்தகங்கள் படிப்பதால் என்ன பயன்? இரா மாயணத்தைப் படித்தவர்கள் இராமனைப் போலவா வாழ்கிறார்கள்.? மகாபாரதத்தை பல நூற்றாண்டுகளாக நம்மவர்கள் படித் தாலும் வரப்புத்தகராறு வழக்குகள் நடந்து கொண்டுதானே இருக்கின்றன?

திருக்குறளின் கருத்துப்படி வாழ்வ தற்கு எத்தனைபேர் உள்ளனர். எனவே வள் ளலார்,மாணிக்கவாசகர் படைப்பை *நின்வா சகத்தை நான் கலந்து பாடுங்கால்* எனக் கூறு வது போல ஒன்றைப் படிக்கிறபோது அதில் கலந்து கரைந்து படிக்கவேண்டும். இப் போது அப்படியாரும் இருப்பதில்லை.

இந்தியாவில் மதம் சார்ந்து ரிக், யஜுர் சாம, அதர்வண என நான்கு வேதங்கள் உள்ளன. இதில் ரிக் வேதம் மிகப் பழமை யானது.

அது கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே உரு வானது என்பது ஆராய்ச்சியாளர்கள் கருத் தாகும். அறிவில் நூலறிவு, வாழ் அறிவு என உள்ளது.

இதில் நூலறிவு வாழ்க் கைக்குத் தேவை யான வசதிகளைத் தரும். நூலறிவை வெளியே தேடுதல் மூலம் பெறலாம். ஆனால் வாழ்வு அறிவை உள் முகத் தேடுதல் மூலமே பெற முடியும்.

இத்தேடல் நடக்கும்வரை மனிதன் வாழ்வு சிறப்படையாது. வெளித்தேடல் விஞ்ஞானம் உள்தேடலே மெய்ஞ்ஞானம். விஞ்ஞானத் தில் முழுமையான இன்பம் மட்டும் கிடைக் காது.

ஆனால் மெய்ஞ்ஞானத்தில் துன்ப நிழல் படாத பேரின்பம் கிடைக்கும். தற்போது வாழ் வில் சிக்கல்கள் பல மடங்கு அதிகமாக உள் ளன. இதற்குக் காரணம் நுகர்பொருள் வெறி தான். இதிலிருந்து விடுபடுவதற்கு புரிதல் வந்துவிட்டால் வாழ்வில் தெளிவு ஏற்படும். புத்தர் கூறியது போல கைக்குட்டை சாதாரண மாக இருக்கும்போது அவை சுதந்திரமாக உள் ளன. அதில் முடிசுக்கள் விழும்போது சுதந்தி ரத்தை இழக்கிறது.

முடிச்சுகள் எப்படி விழும் எனத் தெரிந் தால் அதிலிருந்து விடுபடும் வழியும் தெரி யும். எனவே வாழ்வில் சிக்கல்கள் எப்படி வரு கிறது எனத் தெரிந்தால் அதிலிருந்து விடு படும் விழிப்புணர்வும் தெரிந்துவிடும். வெளித் தேடலில் விழிப்புணர்வு ஏற்படாது உள்முகத் தேடலில்தான் அது சாத்தியமாகும். வாழ்க்கை என்பது எடுப்பதற்காக அல்ல. அடுத்தவருக்கு கொடுப்பதற்காக என கதைகள் வலியுறுத்து கின்றன என்றார். (2-6)

புத்தாண்டில் உங்கள் முதல் ஆரம்பம்
Computer கல்வியில் தொடங்கட்டும்
Direct Start 2010 Academic Year



Pay 4900/- only
G.C.E. O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட வகுப்புகள்

Diploma in MS Office Application
Diploma in Web Design & Development
Diploma in Computerised Accounting
Diploma in Desktop Publishing

அனைத்து பாடநெறிகளுக்கும் காலம்: 3 மாதங்கள்

Hardware & Networking
Tally Training
JAVA Programming

ASIAN COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088

# திலான் சமரவீர சதம் விளாசல்; இலங்கை அணிக்கு அடுத்த வெற்றி

## இந்திய அணி போராடி ஏமாந்தது

திலான் சமரவீரவின் அதிரடி சதத்தின் மூலம் இலங்கை அணி 5விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

இலங்கை, பங்களாதேஷ் மற்றும் இந்திய அணிகள் மோதும் முத்தரப்பு ஒரு நாள் போட்டித்தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதில் தொடரின் இரண்டாவது ஒருநாள் போட்டியில் நேற்று இலங்கை-இந்திய அணிகள் மோதின. இப்போட்டியில் இலங்கை அணியின் ஆரம்ப அதிரடி ஆட்டக்காரர் டில்சான் காயம் காரணமாக விலக திரிமாணி புதுமுக வீரராக அணியில் சேர்க்கப்பட்டார்.

மிர்பூரில் நடைபெற்ற இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் காம்பீர் 8ஓட்டங்களுடனும், ஷேறாலி 9ஓட்டங்களுடனும் வெலகெதரவின் பந்துவீச்சில் அடுத்தடுத்து ஆட்டமிழக்க இந்திய அணி 6.5ஓவர்களில் 62 ஓட்டங்களை எடுத்து 2விக்கெட்டுக்களையிழந்தது.

ஒரு முனையில் விக்கெட்டுக்கள் வீழ்ந்தாலும் மறுமுனையில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய சேவாக் நம்பிக்கையளித்தார்.

எனினும் வீரேந்திர சேவாக் 31பந்துகளில் (9பவுண்டரிகள் உட்பட) 47ஓட்டங்களை எடுத்து வெலகெதரவின் பந்துவீச்சில் திரிமாணியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து இணைந்த யுவராஜ் சிங்-தோனி ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்க இந்திய அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் யுவராஜ் சிங் 60பந்துகளில் அரைச் சதத்தைக் கடக்க இந்திய அணி 29.1ஓவர்களில் 150ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி நான்காவது விக்கெட்டுக்காக 99ஓட்டங்களை எடுத்த போது அணித் தலைவர் தோனி 37ஓட்டங்களை எடுத்து பெரேராவின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் சங்கக்காரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய ரெய்னா சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் யுவராஜ் சிங் 84பந்துகளில் (6பவுண்டரிகள், 2சிக்ஸர்கள் உட்பட) 74ஓட்டங்களை எடுத்து பெரேராவின் பந்துவீச்சில் லக்மாலிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் 6ஆவது விக்கெட்டுக்காக இணைந்த ரெய்னா-ஜடேஜா ஜோடி அதிரடியான இணைப்பாட்டத்தை வழங்க இந்திய அணி 44.3ஓவர்களில் 250ஓட்டங்களை எட்டியது.

இதில் சுரேஷ் ரய்னா 46பந்துகளில்(4 பவுண்டரிகள் உட்பட) 35ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பின்வரிசைத் துடுப்பாட்ட வீரர்களும் சோபிக்காத நிலையில் இந்திய அணி 50ஓவர்கள் நிறைவில் 8விக்கெட்டுக்களையிழந்து 279ஓட்டங்களை எடுத்தது. இதில் ரவீந்திர ஜடேஜா 34பந்துகளில் (3பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 39ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் வெலகெதர 10ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 66ஓட்டங்களைக் கொடுத்து 5விக்கெட்டுக்களையும், துஷார, பெரேரா ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.




பதிலுக்கு 50ஓவர்களில் 280ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு தரங்க -திரிமாணி ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 8.3ஓவர்களில் 43ஓட்டங்களை எடுத்த போது திரிமாணி 22ஓட்டங்களுடன் சிறிகாந்தின் பந்துவீச்சில் காம்பீரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய அணித்தலைவர் சங்கக்கார சிறப்பாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் உபுல் தரங்க 48பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 30ஓட்டங்களுடன், ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் அவரிடமே பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-சமரவீர ஜோடி அதிரடியான இணைப்பாட்டத்தை வழங்க இலங்கை அணி 19.4ஓவர்களில் 100ஓட்டங்களைக் கடந்தது.

இந்த ஜோடியைப் பிரிக்க இந்திய அணித் தலைவர் தோனி களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்த போதும் பலனளிக்கவில்லை. இதில் திலான் சமரவீர 51பந்துகளிலும், அணித் தலைவர் குமார் சங்கக்கார 66பந்துகளிலும் தமது அரைச்சதத்தை பூர்த்தி செய்தனர்.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 20.4ஓவர்களில் 122ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அணித்தலைவர் குமார் சங்கக்கார 80பந்துகளில் (4பவுண்டரிகள்) 60ஓட்டங்களை எடுத்து ஹர்பஜன் சிங்கின் பந்துவீச்சில் ரெய்னாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய கண்டாம்பி 8, றாண்டீவ் 4ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்ற இலங்கை அணி 43.3ஓவர்களில் 226ஓட்டங்களை எடுத்து 5விக்கெட்டுக்களையிழந்தது. மறுமுனையில் திலான் சமரவீர 104ஆவது பந்தில் தனது இரண்டாவது சதத்தைப் பூர்த்தி செய்ய இலங்கை அணி 45.5 ஓவர்களில் 250ஓட்டங்களை எட்டியது.

ஆறாவது விக்கெட்டுக்காக இணைந்த சமரவீர-பெரேராவின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் இலங்கை அணி 48ஓவர்களில் 5விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 283ஓட்டங்களை எடுத்து 5விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இதில் திலான் சமரவீர 106பந்துகளில் (11பவுண்டரிகள் உட்பட) 105ஓட்டங்களையும், பெரேரா 15பந்துகளில் (6பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 36ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் குவித்தனர்.

பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 3விக்கெட்டுக்களையும், சிறிசாந்த் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். இப் போட்டியில் இலங்கை அணியின் வெற்றிக்கு வழிசமைத்த திலான் சமரவீர ஆட்டநாயகனாக தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் 4புள்ளிகளினைப் பெற்ற இலங்கை அணி தொடரில் 8புள்ளிகளுடன் முன்னிலையிலுள்ளது.

# கனேரியா, குல்லின் வேகத்தில் அவுஸ்திரேலிய அணி தடுமாற்றம்


டனேஷ் கனேரியா-உமர் குல்லின் சிறப்பான பந்துவீச்சிற்கு முகம் கொடுக்க முடியா மல் அவுஸ்திரேலிய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் அதன் இரண்டாவது இன்னிங்ஸில் 286ஓட்டங்களை எடுத்து 8 விக்கெட்டுக்களையிழந்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் கடந்த வாரம் மெல்போர்னில் நடைபெற்ற முதலாவது போட்டியில் அவுஸ்திரே லிய அணி வெற்றிபெற்று தொடரில் 1:0என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 3ஆம் திகதி சிட்னியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 127ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ் தான் அணி முதலாவது இன்னிங்ஸில் நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடி பில் 9விக்கெட்டுக்களையிழந்து 331ஓட்டங் களை எடுத்தது.



இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டையுமிழந்து 333ஓட்டங்களை எடுத்தது.

இதில் சல்மான் பட் 71ஓட்டங்களையும், இம்ரான் பர்காத் 53ஓட்டங்களையும், உமர் அக்மல் 49,அணித்தலைவர் மொகமட் யூசுப் 46ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பொல்லிங்கர் 4விக்கெட்டுக்களையும், ஜோன்சன், வோட்ஷன் ஆகியோர் தலா 2விக்கெட்டுக்களையும், சிடில், ஹயூரிச் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தி னர்.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 206ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த அவுஸ்திரேலிய அணி இரண்டா வது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் 8விக்கெட்டுக்களையிழந்து 286ஓட்டங்களை எடுத்தது.

இதில் வோட்ஷன் 97ஓட்டங்களையும், மைகெல் ஹசி 73 ஓட்டங்களையும், ஹக்ஸ் 37 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் டனேஷ் கனேரியா 4விக்கெட்டுக்களையும், உமர் குல் 3விக்கெட்டுக்களையும், மொகமட் ஆசிப் ஒரு விக்கெட்டை யும் சாய்த்தனர்.

இப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 2விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இரண்டாவது இன்னிங்ஸில் 80ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ளது. போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# பாடசாலை மட்ட உதைபந்தாட்டம் ஹாட்லி, தேவரையாளி சம்பியன்

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளிற் கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அணி தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை 2:1 என்ற கோல்கணக்கில் வீழ்த்தி சம்பியனானது.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி போட்டியின் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தியது.

போட்டியின் 12ஆவது நிமிடத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணி முன் கள வீரர் கோல் ஒன்றை போட்டு ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்தார்.

முதல் பாதி ஆட்டம் முடிபடைய 1:0 என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றது.

இடைவேளையின் பின் ஆட்டம் தொடங்கி விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஹாட்லிக் கல்லூரியின் மற்றுமொரு முன்களவீரர் தனது அணிக்காக மிகச் சிறப்பான கோல் ஒன்றை பெற்றுக் கொடுத்தார்.

தேவரையாளி இந்துக் கல்லூரி இறுதிவரை கோல் போட முயற்சித்தும் அதை ஹாட்லிக் கல்லூரி பின்கள வீரர்களால் முறியடிக்கப் பட்டது.

இதில் 2:0 என்ற கோல் கணக்கில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வடமராட்சிக் கல்வி வலய சம்பியனாகியது.

இதேவேளை 18வயதுப் பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷனை எதிர்த்து தேவரையாளி இந்துக் கல்லூரி மோதியது.

இதில் தேவரையாளி இந்துக்கல்லூரி 3:1 கோல் கணக்கில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷனை வெற்றிகொண்டது.

இடைவேளை வரை இரு அணி வீரர்கள் தற்காப்பு ஆட்டத்தை மேற்கொண்டதால் இடை வேளை வரை இரு அணிகளும் கோல் எதுவும் போடாமல் ஆடின.

இடைவேளையின் பின் தேவரையாளி இந்துக் கல்லூரி முன்கள வீரர்கள் கொடுத்த பந்தை றஜீவன் லாவகமாக தனது தலையால் கோல் ஒன்றை போட்டு ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்தார். உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் வீரர்கள் கோல் போடுவதற்கு முயற்சித்தும் போட்டியின் பின்கள வீரர்களால் முறியடிக்கப்பட்டது.

பின் தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு கிடைத்த தண்டனை உதை மூலம் பிரதீப் கோல் ஒன்றைப் பெற்றுக் கொடுத்தார்.

ஆட்டத்தின் இறுதிநேரத்தில் மீண்டும் ஒரு கோலை பிரதீப் தனது அணிக்காக பெற்றுக் கொடுத்து வெற்றியை உறுதிப்படுத்தினார்.

இறுதி வரை சிறப்பாக ஆடிய உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வீரர்கள் தர்ஷிகன் தனது அணிக்காக கோல் ஒன்றைப் போட்டு தனது அணியை ஆறுதல் படுத்தினார்.

இறுதியில் தேவரையாளி இந்துக் கல்லூரி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வடமராட்சி கல்வி வலய சம்பியனாகியது.



NORTH LANKA IIT
#113, Laxan Plaza, Navalar Rd., Jaffna.
0213214305, 0217390110, 0214920779

மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2010
விண்ணப்ப முடிவுத் திகதி 09-01-2009 வரை நீடிக்கப்பட்டுள்ளது
இத் திட்டத்தில் இணைவதின் மூலம்.....

- குறைந்த கட்டணத்தில் கற்கைநெறியை பயில முடியும்
- வங்கிக் கடன வசதி
- சர்வதேச தரமுடைய Microsoft சான்றிதழ்களைப் பெற MCP, MCSA, MCSE போன்ற கற்கை நெறிகளை பட்டப்படிப்புடனேயே கற்று 4 பட்டங்களையும் பெறக் கூடிய அரிய வாய்ப்பு!
- வெளிநாட்டு பட்டமளிப்பு விழாக்களில் பங்குபெறக் கூடிய அரியு வாய்ப்பு!
- பட்டப்பின்படிப்பிற்காக பகுதிநேர வேலைவாய்ப்புடன் வெளிநாடு செல்லக்கூடிய கூடிய வாய்ப்பு!

Your Right Choice For Degree Education


## லொறி அரசமரத்துடன் மோதி...

சந்திக்கு அண்மையில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவந்துள்ளதாவது, கொடிகாமத்திலிருந்து விறகுகளை ஏற்றிறுக் கொண்டு யாழ்ப்பாணத்துக்குவந்த இவ் லொறி நேற்று முன்தினம் இரவு மீண்டும் கொடிகாமத்திற்குச் சென்றபோது இவ்விபத்து இடம் பெற்றுள்ளது.

சம்பவத்தில் செல்வராசா ரமேஸ்வரன் (வயது 23) என்பவர் படுகாயமடைந்நிலை யில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்வழியில் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமத்தைச் சேர்ந்த சின்ராஸ்குமார் (வயது 23) இராசலிங்கம் ரேணுகாந் (வயது 22), சண்முகம் சிவபாதம் (வயது 43), சிவபாதம் பிறேம் (வயது 21), சண்முகம் தவராசா (வயது 37), ரவீந்திரன் ரகுநாதன் (வயது 26) ஆகியோர்படுகாயமடைந்தநிலையில்யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளன.

காயமடைந்தவர்கள் இராணுவத்தின் உதவியுடன் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டனர். (ச-30)

## நீதியான தேர்தல் ஒன்றை...

கிழக்கில் தேர்தல் நடை பெறும் தொகுதிகள் தொடர்பாக அதிககவனம் செலுத்தவுள்ளதாகவும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை பவ்ரல் அமைப்பு நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் ரோஹன ஹெட்டியாராச்சி இவ்வாறு குறிப்பிட்டார்.

115 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வரை பதிவாகியுள்ளது. இவற்றில் 32 தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மொத்தம் 22 தாக்குதல் சம்பவங்கள் மாத்திரமே இடம் பெற்றுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 20 நாட்கள் உள்ள நிலையில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்ற அச்சம் நிலவுகின்றது. இந்த நிலை இவ்வாறு நீடித்தால் சுதந்திரமான நீதியான தேர்தலை நடத்த முடியாது என்று தேர்தல் ஆணையாள ருக்கு பவ்ரல் அமைப்பு அறிவிக்கும் என் றும் ரோஹன ஹெட்டியாராச்சி சொன்னார்.

எனவேநீதியான சுதந்திரமான் சுதந்திர மான தேர்தலை நடத்துவதறகு தேர்தல் ஆணையாளர் உட்பட தேர்தல்திணைக்கள அதிகாரிகள், பொலிஸ் திணைக்களம், அரசியல் கட்சிகள் மற் றும்சிவில் அமைப்புகளும்பொதுமக்களும் முன் வரவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (ச-5)

## ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த...

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆலோசனைக்கூட்டம் நேற்றும் நடைபெற்றது.

இக் கூட்டத்துக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 18 பேர் கலந்து கொண்டனர்.

இவர்களில் ரெலோ அமைப்பைச் சேர்ந்த சிவாஜிலிங்கம், செல்வம் அடைக்கலநாதன், சிறிகாந்தா, வினோதராதலிங்கம், தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொது அமைப்பைச் சேர்ந்த பத்மினி சிதம்பரநாதன், கஜேந்திரன், சிவநாதன் கிசோர் ஆகியோர் தேர்தலை புறக்கணிக்க வேண்டும் என கோரினர்.

இந்நிலையில் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஜெயானந்த மூர்த்தி, சந்திரநேரு சந்திரகாந்தன், கனகசபை ஆகியோர் நாட்டில் இல்லை.

கனகரட்னம் எம்.பி. சிறையில் உள்ளார். இவர்களைவிட ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக சரத்பொன்சேகாவிற்கு ஆதரவு தெரிவிக்க வேண்டுமென வாதிட்டனர்.

இந்நிலையில் சுமார் ஆறு மணித்தியாலங்களாக இரு குழுக்களுக்கும் இடையில் கடும் வாதப்பிரதிவாதங்கள் இடம் பெற்றன. இறுதியில் 10:8 என்ற நிலையில் ஜெனரல் சரத்பொன்கோவிற்கு ஆதரவு வழங்குவது என்ற முடிபு எடுக்கப்பட்டது.

நேற்றிரவு 9.30 மணிக்கே கூட்டம் முடிபடைந்ததால் கூட்டமைப்பின் முடிபை அறிவிக்க முடியவில்லை எனவும் இன்று ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நடத்தி அதில் தமது முடிபை அறிவிக்கவுள்ளதாகவும் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-5)


DMI

A/L 2012

(கலை, வர்த்தகப் பிரிவுகள்)

ஜனவரி -09

காலை 9.00 மணி

D.Sam, சந்திரசேகர், ஜெகதீஸ்வரன், பாபு, இளங்கோ, பவன், மங்களேஸ், பத்மனி, திலை, ரமேஸ், செந்தூர், மதி, தவசேகர், சிறி, பகீர்


## கொலைக் குற்றங்களை சுமத்த பாதுகாப்பு செயலர் முனைகிறார்

### ஜெனரல் சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் வாதிகளின் கொலை குற்றங்களை தன்மீது சுமத்த பாதுகாப்பு செயலாளர் கோதபாய ராஜ பக்ஷமுயற்சிசெய்கிறார்என்றும்அந்தகொலைகளுக்கான முழு பொறுப்பையும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷ ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் குண்டர்களை பயன்படுத்தி பாதுகாப்பு செயலாளர் கோதபாய ராஜபக்ஷ பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகவும் சரத் பொன் சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனநாயக விரோத செயற்பாடுகளை கண்டித்து கொழும்பில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற ஆர்ப்பாட்ட பேரணியின் முடிபில் உரையாற்றிய போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ச-5)

## அதிபர்-ஆசிரியர்...

நடைபெற்ற ஊடகவியலா ளர் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்படி 1005 ரூபாய் முதல் 1685 ரூபாய் வரையிலான தொகை சம்பளம் அதிகரிப்பாக வழங்கப்படவுள்ளது. 2008 ஆம் ஆண்டுஜூலைமாதம்முதலாம்திகதி முதலான நிலுவைத் தொகையும் வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-5)

## ஜனாதிபதி தேர்...

சில்வா-கொடி, அருண த சொய்சா-மோட்டார் கார், சரத் பின்னதுவ-இரட்டைச்செடிகள், லால் பெரேரா-தொலைபேசி, சரத் பொன் சேகா-அன்னம், சரத் மன மேந்திர-வில்லும் அம்பும், மொஹமட் முஸ்தபா-தொப்பி, டபிள்யூ வி.மஹிமன் ரஞ்சித்- அலுமாரி,

மகிந்த ராஜபக்ஷ-வெற்றிலை, பனாகொட தொன்பிரின்ஸ்சொலமன் அநுரலியனகே-கங்காரு, உக்குபண்டா விஜேகோன்-பலாப்பழம், எம்.கே. சிவாஜிலிங்கம்-கப்பல், பத்தர முல்லே சீலரத்ன தேரர்-உழவு இயந்திரம், அச்சல அசோக சுரவீர-தேங்காய்.

அதேவேளை எதிர்வரும் ஜனாதிபதித் தேர் தலில் மொத்தமாக14 மில்லியன்88 ஆயிரத்து500 பேர் வாக்களிக்க தகுதி பெற்றதாக தேர்தல்திணைக்களம்தெரிவித்துள்ளது.

வடக்கில் இடம் பெயர்ந்தமக்களை பதிவு செய்யும்போது குறிப்பிட்டசிலரின் பெயர்இருதடைவை பதிவுசெய்யப் பட்டிருந்ததாகவும் அதுதற்போது திருத்தப்பட்டுள்ளதாகவும்திணைக் களம்அறிவித்துள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் 7 இலட் சத்து 21 ஆயிரத்து359 பேர்வாக்களிக்க தகுதிபெற்றுள்ளதாகவும் தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-5)


CIW™ Mega Schol : up to 50%

Web Developer

உயர்சம்பளத்துடனான வேலைவாய்ப்பு.

அனைவரும் பயிலலாம்

(வரையறுக்கப்பட்ட பதிவுகள்)

0718 475 501


## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை மோகனநாதன்

### அதிபர், யா/அராலி இந்துக் கல்லூரி



கலைநகர், வட்டு.வடக்கு, சித்தன்கேணியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை மோகனநாதன் அவர்கள் 2010.01.03 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 2010.01.07 வியாழக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், கல்விச் சமூகத்தினர் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு ஆழ்ந்த துயரத்தோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

கலைநகர்,
வட்டு. வடக்கு,
சித்தன்கேணி.
தொ.பேசி.021 300 2666

தகவல்
-குடும்பத்தினர்

(C-4149)

### குட்டித்தம்பி கனகரத்தினம்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் தம்மனை அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி கனகரத்தினம் நேற்றுக் காலமானார்.

அன்னார் அன்னபூபதியின் அன்புக் கணவரும் தயாளினி (இந்தியா), சுபாஷினி, சுபாகரன் (உதவி அரசாங்க அதிபர் பணிமனை, ஊர்காவற்றுறை), தயாபரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,

மகேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற குலசங்கர் மற்றும் கஜவதனி, லோகரஞ்சினி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (06.01.2010) பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தம்மனை
அளவெட்டி மேற்கு,
அளவெட்டி
021 321 8113

தகவல்;
சுபாகரன்
(உ.அ.ப.ஊர்காவற்றுறை)

(c-4150)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.